# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



ஆகஸ்ட் - 2006

சமய - சமூக - இலக்கிய வெளியீடு 15/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


ஆகஸ்ட் - 2006

மலர்-39 இதழ்- 05


ஆசிரியர்
றொஹான் பேனார்ட்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லியோ வாஸ்
ஸ்ரான்லி பிரபாகரன்


வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்



முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486



விலை - 15/=
ஆண்டு சந்தா : 250/=
ஆறுமாதச் சந்தா : 130/=
(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| முப்பெரும் விழாக்... | - | 02 |
| இலக்கிய மஞ்சரி | - | 03 |
| வரலாற்றில் தொடர்புச்.... | - | 05 |
| விடியலுக்கு வழிகாட்டு.... | - | 09 |
| மறை அறிவை வளர்ப்போம் | - | 10 |
| ஜனநாயக முகமூடிகள் | - | 12 |
| மாணவர் பக்கம் | - | 14 |
| மனக்கோலம் | - | 15 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 17 |
| அரசியல் அரசியல் அரசியல்... | - | 19 |
| த டாவின்சி கோட் | - | 22 |
| டாக்டரிடம் கேளுங்கள் | - | 24 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| பரிசுப் போட்டி | - | 28 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

கடலின் அக்கரை போவோமா,
கடலின் அக்கரை போவோமே
என்று ஆடிப்பாடித் திரவியம் தேடியதும் நாடுகளைக் கண்டு பிடித்ததும் அந்தக் காலம்.

கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டதனாலும் வலுக்கட்டாய வெளியேற்றத்தினாலும் நாளுக்குநாள் நமது மக்கள் கடல்வழியாக பெருவாரியாக இந்தியாவுக்குச் செல்கின்றார்கள்.

இந்தப் பயணத்தின் உக்கிரமும், பயங்கரமும் படகுகள் கவிழ்கின்றபோதுதான் உலகிற்குத் தெரிய வருகிறது. இப்பேற்பட்ட 'றிஸ்க்' எடுக்கக்கூட மக்கள் துணிந்து விட்டார்கள்.

மனிதப் படுகொலைகள் மலிந்து விட்டதனாலும், நாளாந்த ஜீவனோபாயத்தில் மண் அள்ளிப் போட்டதனாலும், தினந்தோறும் பயந்து சீவியத்தை ஓட்டமுடியாது என்பதனாலும், மக்கள் போனால்தான் இந்தியாவின் தலையீடு கிடைக்கும் என்ற நெருக்குவாரத்தினாலும் மக்கள் இப்பேற்பட்ட அல்லோல கல்லோல பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது.

வழக்கம்போலவே தமிழ்நாட்டின் கறுப்புக் கண்ணாடி வாய்ஜால அரசியல் இலங்கைத் தமிழர்களை முன்புபோல் தற்போது கருத்திற் கொள்ள சற்று எட்டவே நிற்கிறது.

தமிழகத்தின் அரசியலில் மூன்றாம் சக்தியாகக் கணிக்கப் பட்டவரின் அரசியல் 'ஜம்பிங்கினால்' அவர் கருத்தும் கோஷமும் சோடை போய் "வை" அண்ணா? இந்தக்கதி தங்களுக்காஎன்று கேள்விகேட்கத் தோணுகிறது.

இந்திய நடுவண் அரசிற்கே ஏகப்பட்ட பிரச்சினைகள். அவற்றில் கஷ்மீர் தீவிரவாதப்பிரச்சினை, மிதவாத மதப்பிரச்சினை, பாகிஸ்தானின் ஏட்டிக்குப் போட்டிப் பிரச்சினை இவற்றின் பிரதிபலிப்பாக ஆங்காங்கே குண்டு வெடிப்புக்களும், தீயிட்டு எரிப்புக்களும் அத்தோடு ஒருதரம் பட்டதும் இழந்ததும் போதுமென்ற நிலையில் வெறும் அரசியல் கண்துடைப்பு அறிக்கைகளை மாத்திரம் விட்டுக்கொண்டு தள்ளியே நிற்கிறது இந்திய அரசு.

இது இப்படியிருக்க, மக்களின் குமுறல் களையும், குதர்க்க வாதங்களையும், பச்சோந்தித்தனங் களையும், உண்மைக்குப் புறம்பான மசோதாக்களையும், கோடிட்டுக்காட்டி தெளிவுபடுத்த முடிந்தால், அது வளர்ந்துவரும் ஊடகத்துறையால் மாத்திரமே முடிந்த காரியமாகும்.

ஆனால், இந்த ஊடகத்துறையினையும், சமூகத் தொடர்பாடல் தொழில் நுட்பங்களையும் யார்தான் சரியாகப் பயன்படுத்துகிறார்கள்? உண்மையைப் பிழையெனத் திரிபுபடுத்தவும் பொய்யை உண்மையென விரிவுபடுத்தவுமே பல சுயநலவாதிகளால் இவையாவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

இன்று 'ரிவி' றேடியோ, தொலைபேசி, கொம்பியூட்டர் மற்றும் இணையத்தளங்களென்று தொழில்நுட்ப தொடர்புசாதனங்கள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகின்றன. இவையாவும் இன்றைய

- 16ம் பக்கம் பார்க்க -



## இறைவாக்கு

உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி.
இதற்காகவே நான் பிறந்தேன் ;
இதற்காகவே உலகிற்கு வந்தேன்.

யோவான் 18/31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெரும் விழாக் கொண்டாடும் புனித இன்னாசியாரின் இயேசு சபை

இயேசுசபையைப் பொறுத்தமட்டில் ஏன் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்த மட்டிலும் கூட இவ்வாண்டு மிகவும் முக்கியமானது. தூய இன்னாசியார் அவர்கள் இயேசுசபையை உண்டாக்கிய கர்த்தா. அத்துடன் இவ்வாண்டு இயேசுசபையினர் முக்கூட்டு யுபிலியைக் கொண்டாடுகின்றனர். புனித இன்னாசியார், புனித சவேரியார், பீற்றர் பாவர் ஆகிய மூவரின் யுபிலியே இம் முக்கூட்டு யூபிலி ஆகும். புனித இன்னாசியார் இறையடி சேர்ந்த 450ம் ஆண்டும், பீற்றர் பாவர், புனித சவேரியார் ஆகியோர் பிறந்த 500ம் ஆண்டுமாக இந்த யுபிலிக் கொண்டாட்டம் அமைகின்றது.



இனிகோ என்ற பெயர் கொண்ட இன்னாசியார் இளமையில் வாரிசு முறையில் போர்த்துக்கல் நாட்டின் தளபதியாக முன்னேறியவர். தனது நாட்டு அரண்மனையையும், பம்பலூனா கோட்டையையும் பிரான்சு நாட்டுப் போர் வீரர்களிடம் இருந்து காப்பாற்றும் போர்க்காலப் பணியில் இளமைக் காலத்தைக் கடத்தினார்.

ஒருநாள் எதிரிகளினால் பம்பலூனா கோட்டை தாக்கப்பட்ட போது இனிகோவின் கால்களும் குண்டுகளால் துளைக்கப்பட்டன. முறிந்த எலும்புகளை எடுத்துப் பொருத்தி சிகிச்சை அளித்தனர். ஆனால் அவை சரியாகப் பொருந்தவில்லை. மீண்டும் அவற்றைச் சீர்செய்தனர். அதனால் அவர் உச்சக்கட்ட வேதனையை அனுபவித்தார். நீண்ட நாட்கள் படுத்த படுக்கையில் கிடக்க வேண்டியேற்பட்டது. இப்போது கிடைத்த ஓய்வின் காரணமாக கிறிஸ்துவின் வரலாற்று நூல் ஒன்றும் புனிதர்களின் வரலாற்று நூல் ஒன்றும் அவருக்கு வாசிக்கக் கிடைத்தது. அதனால் அவரினுள் ஒரு ஞான வெளிச்சம் உண்டானது. இவ்வுலகப் பொருட்களினதும் பதவி பட்டம் என்பவற்றினதும் மாயைத்தன்மையை அவர் உணர்ந்தார். அது போல் "இறைவனின் அதிமிகு மகிமைக்காக" உழைக்கவேண்டும் என்ற அவா இனிகோவின் உள்ளத்துள் எழுந்தது.

மரியன்னை, குழந்தை இயேசுவுடன் அவருக்கு அளித்த காட்சி பெரியதோர் ஊக்கத்தை ஏற்படுத்தியது. திருமணம் செய்யாமல் வாழ்வதற்கான வார்த்தைப்பாடொன்றை எடுத்துக் கொண்டார். பார்சலோனாவில் இருந்த மான்சராள் மரியன்னை ஆலயத்தில் 3 நாள் கடும் ஒறுத்தலுடன் கூடிய தியானம் ஒன்றை மேற்கொண்டார். பின் பாவசங்கீர்த்தனம் ஒன்றை மேற்கொண்டார். இதன் பின் தன் தளபதி உடைகளினை ஏழையொருவனுக்குத் தானம் செய்துவிட்டார்.

அடுத்து வந்த பலமாதங்களில் அண்மையில் இருந்த மன்ரேசா குகையில் தங்குவதும், மருத்துவமனைகளில் சேவை செய்வதுமாக தவமுயற்சிகளில் ஈடுபட்டார். தான் செய்து பெரியளவில் வெற்றி பெற்ற ஞானமுயற்சிகளை எழுத்து வடிவில் வடித்தார். இன்னாசியாரின் மன்ரேசாக் குகைச் செப அனுபவங்கள்தான் அவர் எழுதிய "ஆன்மீகப்பயிற்சிகள்" என்னும் ஆன்மீக நூல்.

பின்னர் 11 ஆண்டுகள் இலத்தீன் இலக்கணத்தையும், மறைக்கல்வியையும் கற்றுக் கொண்டார். 43 வயதில் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். 1534ம் ஆண்டு மோன்மார்ட்டர் என்ற இடத்தில் அன்னையின் விண்ணேற்றப் பெருவிழா அன்று ஆறு நண்பர்களுடன் சேர்ந்து தரித்திரம், கற்பு என்ற இருவார்த்தைப் பாடுகளை எடுத்துக் கொண்டார். இவ்வறுவரில் புனித பிரான்சிஸ் சவேரியாரும் ஒருவர்.

திருத்தந்தை 3ம் சின்னப்பரின் ஆலோசனைக் கமைய இவர்கள் குருப்பட்டம் பெற்றுக் கொண்டனர். 1514ம் ஆண்டு புனித இன்னாசியார் தனது சபையின் முதல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். "இயேசு சபை" என்ற பெயரோடு சுமார் 1000 உறுப்பினர்களுடன் சபை இயங்கியது. இன்று இயேசு சபையில் சுமார் 19565 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.

இறுதியாக புனிதருக்கு விருப்பமான ஜெபத்துடன் நாம் விடைபெறுவோம்

ஆண்டவரே, எனது விருப்பம், எனது ஞாபகம், எனது பக்தி, எனது சித்தம் முழுவதையும் ஏற்றுக் கொள்ளும். எனது இருப்பையும், என்னிடம் உள்ளவை அனைத்தையும் நீரே எனக்கு அளித்தீர். இவற்றை உமது திருவுளத்தின் முன் எடுத்து வைக்கின்றேன். என்னை வழி நடத்தும். உமது அன்பையும் அருளையும் மட்டும் எனக்குத்தாரும். இவற்றுடன் நான் போதிய அளவு செல்வாக்குள்ளவன் என்பதால் வேறு எதையும் நான் கேட்கமாட்டேன் - ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## தகவல் தொடர்பியல்

தொடர்பு சாதனங்கள் இன்றைய வாழ்க்கையின் முது கெலும்புகள். குறிப்பிட்ட தகவல் ஒன்று, அதிவிரைவாக, குறிப்பிட்ட ஒருவரையோ அல்லது கூட்டத்தாரையோ சென்றடைய வேண்டியது அவசியம். அதற்கு ஓர் ஊடகம் அவசியம்.

ஆற்றைக்கடக்கத் தோணியோ, பாலமோ அவசியம். இச்சந்தர்ப்பத்தில் தோணி அல்லது பாலம் கடப்பதற்கான ஊடகமாகத் தொழிற்படுகின்றது. இவ்வாறே தகவல் எடுத்துச் செல்லப்பட ஊடகங்கள் அவசியமாகும்.


மொழிதோன்றுமுன் உடலசைவுகள் மூலமே தகவல்கள் பரிமாறப்பட்டன. இன்றும் கூட வாய் பேச இயலாதவர்கள் சைகைகள் மூலமே தமது தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். ஆதி மனிதன் கூவுதல், பறையடித்தல், மணியோசை எழுப்புதல், புகைமூட்டல், தீவைத்தல் போன்ற உபாயங்களைக் கையாண்டு தகவல்களைப் பரிமாறிக் கொண்டான்.

காலம் செல்லச்செல்ல நாகரீகம் முன்னேற முன்னேற தகவல் பரிமாற்றம் செய்யப்படும் முறையும் மாற்றம் அடையத்தொடங்கியது. டாக்டர் வெ. கிருட்டினசாமி அவர்களால் எழுதப்பட்ட தகவல் தொடர்பியல் என்னும் நூலில் பல அரிய விடயங்கள் காணப்படுகின்றன. அவர் எழுதியவற்றில் சிலவற்றை 'இலக்கிய மஞ்சரியில்' இம்முறை பகிர்ந்து கொள்வோம்.

தொடர்பு என்றால் என்ன என்பதற்கு நாற்பத்து மூன்று வரைவிலக்கணங்களை டாக்டர். வெ. கிருட்டிணசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதில் பிராங் ஈ. எக்ஸ். டான்சு என்பவரின் வரைவிலக்கணம் சற்று எளிமையானது.

"குறிப்பிட்ட சமூகச்சூழலில் செய்தி அனுப்பு நருக்கும் பெறுநருக்கும் இடையே நிகழும் செய்திப்பரிமாற்றச் செயல்முறையே (உறவாடும் வழிமுறை) 'தொடர்பாடல்' எனப்படும்".



அனுப்புனர், செய்திகள், அனுப்பும்முறை, பெறுநருக்கு பொருள்புரிதல் என்னும் நான்கு தொடர்ச்சியான கூறுகளை உள்ளடக்கியதே தொடர்பியலாகும்.

ஒலிகள், வாய்மொழி, குறியீடு இசைக் கருவிகள், தூதுவர்களும் ஒற்றர்களும், ஓவியம், பறவைகள், தொடர் செங்கல்முறை, சுவரில் ஒட்டலும் அரண்மனை முன்வைத்தலும், கல்வெட்டுக்கள், ஏடுகள், கடிதங்கள் என்பனவும் பிற்காலங்களில் அச்சு சாதனங்களின் பயன்பாட்டிலான பத்திரிகைகள் போன்றனவும், சினிமா, இலத்திரனியல் உபகரணங்களான வானொலி, தொலைக்காட்சி, இணையம், தொலைபேசி என்பனவும் சிறப்பான தொடர்பு சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

அது சரி! தொடர் செங்கல் சுவர்முறை என்றால் என்ன...? அதுபற்றி டாக்டர். கிருட்டிண சாமி என்ன சொல்கின்றார் என்று பார்ப்போம்.

கி.மு 500 இல் வாழ்ந்த கிரேக்கர்கள் சுவரின் மீது தீ வழியாகச் செய்தி அனுப்பும்முறையை இதுகுறிக்கின்றது. டில்லியில் இருந்த ஜகாங்கீரின் மனைவி பிள்ளைப்பேற்றிற்காக ஆக்ரா சென்றிருந்தாள். தனக்குப்பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று அறியவிரும்பிய ஜகாங்கீர் டில்லியில் இருந்து ஆக்ராவரை சிவப்பு, பச்சை கொடிகளையுடைய வீரர்களை நிறுத்தினார். ஆண் குழந்தையாயின் சிவப்புக்கொடியையும், பெண்ணாயின் பச்சைக் கொடியையும் காட்டவேண்டும் என்று ஆணையிட்டிருந்தார்.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் ஒவ்வொரு நாள் இரவிலும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் குடிகொண்டுள்ள ஆண்டாளுக்கு இரவு வழிபாடு முடிவடைந்த பின்னரே உணவுண்ணும் பழக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடையவர். இச்செய்தியை அறிய ஸ்ரீ வில்லிபுத்தூர் வரை ஒரு கல்லுக்கு ஒன்றாக மண்டபங்கள் கட்டினார். அவற்றில் பணியாட்களை நிறுத்தி மணியொலிக்கச் செய்து செய்தியினை அறிந்தார்.

பழங்கால உரோமர்கள் அன்றாடச் செய்திகள் எழுதப்பட்ட தாள்களை பொதுவிடங்களில் உள்ள சுவர்களில் ஒட்டிவைத்தனர். இம்முறையே 'சுவரில் ஒட்டலும் அரண்மனை முன்வைத்தலும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்பாலில் 'எதிர்மறைத் தொடர்பாடல்' என்ற அம்சம் உண்டு. தொடர்பாடலின் நோக்கமானது சரியான, துல்லியமான செய்தியைத் தருவதாகும். இப்பணியைத் தொடர்பாடல் செய்யாத போது அது பயனற்றதாகிவிடுகின்றது. வதந்திகள், பழிமொழிகள் (Gossip) மிகைப்படுத்தல் என்பன எதிர்மறைத் தொடர்புகள் ஆகும்.

வதந்தியின் பண்புகள் சில உண்டு.

- தவறானஅல்லது மிகைப்படுத்தப்பட்டகதை
- மிகையான ஆர்வம்
- வாய் மொழியாகப் பரவுதல்
- செய்திகள் சிதைவடைதல்
- தெளிவற்ற தன்மை
- உணர்ச்சியைத் தூண்டுதல்
- தொடக்கம் தெரியாது
- நிரூபிப்பது கடினம்
- பயங்கரமான கருவி
- தடுப்பது கடினம்

இவ்வாறு பல பயனுள்ள விடயங்களை 528பக்கங்கள் கொண்டுள்ள 'தகவல் தொடர்பியல்' தாங்கியுள்ளது.

# நான் மரக்கொல்லியா....!

**ஆண்டவரே!**

நான் ஜெபம் செய்வது மட்டும் போதாது
ஜெபம் எனக்கு ஏதோ செய்ய வேண்டும்.

**ஆண்டவரே!**


நான் பலவேளைகளில் என் வார்த்தைகளால்
உம்மைத் திணறடித்து விடுகிறேன்.
நீர் என்னை மாற்ற உமக்கு சந்தர்ப்பம்
கொடுக்காமல் வார்த்தைகளால் எனக்குக்
கவசமணிந்து கொள்கிறேன்.

**ஆண்டவரே!**

என் வார்த்தைகளை நிறுத்தும்
உமது வார்த்தைகள் என்னை ஊடுருவட்டும்
என்னை மாற்றட்டும்.

**ஆண்டவரே!**

எத்தனை முறை என் நல்லெண்ணங்கள்
வெறும் வார்த்தைகளாகவே நின்றுவிட்டன.
மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகள்!
ஆனால், அந்த வார்த்தைகள்
கருவிலேயே கலைந்துபோகும்
குழந்தை போலாகிவிட்டன!



**ஆண்டவரே!**

கருச்சிதைவு புரியும் என்னை மன்னியும்.

**ஆண்டவரே!**

ஜெபத்தைப் பற்றிய என் பயத்தை நீக்கும்
ஆம், ஜெபம் என்கிற ரணசிகிச்சைக்கு
என்னை ஆயத்தப்படுத்தும்.

ஜெபம் என்பது உரமாக இருந்தால்
அங்கு வளர்ச்சி இருக்கும்.
செயல் என்ற பூ   பூ க்கும்.
நான் செய்யும் ஜெபங்கள்
உரமா அல்லது மரக்கொல்லியா
என்பதை எனக்கு உணர்த்தியருளும்!

ஆமென்

*-யாழ். ராதவல்லி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் தொடர்புச் சாதனங்கள்

கம்யூனிகேஷன் அதாவது தகவல் தொடர்பு எனும் வார்த்தை Communis எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவானது. Communis என்றால் பொதுவானது என்பது பொருள்.

ஒருதகவல் தொடர்பு நிகழ அனுப்புனர் (Sender) தகவல் (Message) பெறுநர் (Receiver) சாதனம் (Equipment) எனும் நான்கு விஷயங்கள் தேவைப்படுகிறது. தகவல்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுசெல்லப் பயன்படும் சாதனங்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன.

ஆதிகால மனிதர்கள் பேச்சு, மொழி ஆகிய எதையும் அறிந்திருக்கவில்லை. வாயிருந்தும் ஊமைகளைப் போல வாழ்ந்தார்கள். கைகள் இருந்தும் எழுத்தை அறியாதவர்களாய் இருந்தார்கள். காரணம் அறியாமை. பேச்சு என்ற ஒரு விஷயத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. தங்களால் பேச்சு மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும் என்ற விஷயத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

முதன்முதலில் தோன்றிய மொழி சைகை மொழி (Gesture Language). ஆதி மனிதர்கள் தங்களின் கருத்துக்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்க சைகை மொழியையே முதன் முதலில் பயன்படுத்தினார்கள். கைகளை ஒருவருடன் ஒருவர் குலுக்கிக் கொள்ளுவதன் மூலம் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார்கள். கைகளை ஒருவருக்கொருவர் கோர்த்துக் கொள்ளுதல் மூலம் நட்பைத் தெரிவித்துக் கொண்டார்கள். சைகை மொழிவளர்ச்சி பெற்று ஓவிய மொழியாக (Art Language) வளர்ச்சி பெற்றது. எளியவகை ஓவியங்கள் மூலம் தங்களது எண்ணத்தை பிறருக்குத் தெரிவித்தார்கள். நாளடைவில் ஓவிய மொழி எழுத்து மொழியாக வளர்ச்சி பெற்றது.

கி.பி. 793ல் அரேபியர்கள் பேப்பர்களைத் தயாரிக்கும் முறையை அறிந்து வைத்திருந்தனர். உலகின் முதல் நூல் கி.பி. 968ல் சீனாவில் உருவாக்கப்பட்டது. அந்நாட்களில் நூல்கள் எழுத்தாணிகளைக் கொண்டு ஓலைகளில் எழுதப்பட்டன. பல படிகள் வேண்டுமென்றால் அதற்கென இருந்த மனிதர்களை வைத்து எழுதப் பட்டு



பிரதிகள் எடுக்கப்பட்டன. இம்முறை அதிக நாட்களையும் அதிக மனித உழைப்பையும் எடுத்துக் கொண்டது. மேலும் எழுத்தாளர்களின் கவனக் குறைவினால் பிரதிகளை எழுதும் போது தவறுகள் நிகழ்ந்தன.

அக்காலத்தில் மதகுருமார்கள், ஆட்சியாளர்கள் போன்ற செல்வாக்கு மிக்கவர்களிடம் மட்டுமே நூல்கள் இருந்தன. சாதாரண மக்கள் கண்களால் கூட புத்தகங்களைப் பார்க்க முடியாத நிலைமை இருந்து வந்தது.

மனிதர்கள் ஆங்காங்கே சிறுசிறு கூட்டங்களாய்த் தீவுகளில் வசிப்பதைப் போல வசித்து வந்தார்கள். ஒருவருக்கொருவர் எந்தத் தொடர்பும் இல்லை. ஏனென்றால் அக்காலத்தில் தகவல் தொடர்புச் சாதனங்கள் எதுவும் இருக்கவில்லை. மனிதன் முதன் முதலில் தன்னைத் தாக்க வந்த விலங்குகளைப் பார்த்து பயத்தில் கத்தினான். இதுவே உலகின் முதல் பேச்சு மொழி எனக்கருதப்படுகிறது. பின்னர் தன்னைத் தாக்கவந்த விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அருகிலிருந்தவரைச் சத்தம் போட்டுக் கத்தி உதவிக்கு அழைத்தான். இப்படி ஆரம்பித்த மனிதன் படிப்படியாகப் பேசக் கற்றுக் கொண்டான். மொழிகள் மெல்ல மெல்லத் தோன்றின.

ஆதிகாலத்தில் திறந்த வெளிகளில் வசித்து வந்த மனிதர்கள் பின்னர் குகைகளில் வசிக்கக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் கற்களைக் கூர்மையாக்கி அதை ஒரு தற்காப்பு ஆயுதமாகவும் விலங்குகளைக் கொல்லவும் பயன்படுத்தி வந்தார்கள். இந்தக் கூர்மையான கல் ஆயுதமே மனிதர்களின் முதல் எழுது கோலாகும். இந்தக் கூரிய கல்லை எழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலைப் போல பயன்படுத்தி தாங்கள் வசித்த குகைச்சுவர்களில் சித்திரங்களைச் செதுக்கி தங்கள் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் வகையில் சின்னச்சின்ன எளிமையான, பார்த்த உடன் புரியும் சித்திரங்களாக வரைந்தார்கள். இந்தச் சித்திரங்கள் அவர்களின் தினசரி வாழ்க்கையையும் வேட்டையில் தாங்கள் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுவதாக அமைந்தன. இதன் பின்னர் களிமண்ணைப் பயன்படுத்தி அதில் சித்திரங்களை எழுத ஆரம்பித்தார்கள்.

பாரசீக நாட்டைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் செய்திகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு தெரிவிக்க கையாண்டமுறை மிகவும் சுவாரசியமானதாகும். உரத்த குரல் வளம் உடையவர்களைத் தேர்வு செய்து அவர்களை ஒரு குறிப்பிட்ட இடை வெளியில் உயரமான மேடைகளை அமைத்து அதன் மீது ஒவ்வொருவராக வரிசையாக நிற்க வைப்பார்கள். பின்னர் தெரிவிக்க வேண்டிய செய்தியை முதலாவதாய் நிற்பவர் அடுத்த ஆள் நிற்குமிடத்தை நோக்கி வாயருகில் கைகளைக் குவித்துக் கொண்டு உரக்கக் கத்திச் செய்தியைச் சொல்லுவார். முதலாவது ஆள் கூறும் செய்தியை இரண்டாவதாய் நிற்கும் ஆள் கவனித்துப் பெற்றுக் கொண்டு அதை மூன்றாமவருக்கு உரத்த குரலில் சொல்லுவார். இவ்வாறு பலமைல் துாரத்திற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் அவர்களால் செய்திகளைப் பரப்பமுடிந்தது.

சிலர் பேசும்போது அவர்களது வாய் மட்டுமன்றி கைகளும் பலவிதமாக அசைவதைப் பார்த்திருக்கலாம். இது இயல்பாகவே பலருக்கும் அமைந்துள்ளது. இத்தகைய சைகைகள் அவர்கள் சொல்லும் விஷயத்தை வலியுறுத்துவதாக அமைந்திருக்கும். காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் இன்றும் செய்திகளைப் பரிமாறிக்கொள்ள இத்தகைய வழியையே பயன்படுத்துகின்றனர். தொலைக்காட்சியிலும் காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோருக்கென நாட்டில் நிகழும் செய்திகளை அறிவிக்க இத்தகைய சைகைகளில் பயிற்சி பெற்றோரைக் கொண்டு செய்திகள் பரிமாறப் படுகின்றன.

தொலைதூரத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள இம்முறைகள் எல்லாம் அதிக அளவில் பயன் அளிப்பவை அல்ல என்பதை உணர்ந்து சில கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். புகையெழுப்பி தொலை துாரத்தில் உள்ளவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட செய்தியைத் தெரிவிப்பது மற்றும் பறையொலிப்பது போன்ற வழிகள் இவற்றுள் சிலவாகும்.

பறையைப் பலவிதமாக அடித்து ஒலிக்கச் செய்து வெவ்வேறு விதமான செய்திகளை வெகுதுாரத்தில் உள்ளவர்களுக்கும் அனுப்ப முடிந்தது. விசிலைப் பயன்படுத்துவது வேறோரு முறையாகும். இன்றும் கூட காவல் துறையினர் அதைப் பயன்படுத்துகின்றனர். ரயில், பஸ் மற்றும் விளையாட்டு அரங்குகளிலும் விசிலைப் பயன்படுத்துவது வழக்கத்தில் உள்ளது.

மற்றொரு கருவி கொம்பு. பழைய காலத்திலிருந்து பல மாற்றங்களை அடைந்து வந்துள்ள கொம்பு இன்றும் வழக்கில் உள்ள ஒரு தகவல் தொடர்புசாதனமாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை கப்பல்களிலும் பெரிய அலுவலகங்களிலும் பேசும் குழாய் என்ற ஒரு சாதனம் பயன்பட்டு வந்தது. நீண்ட குழாய் மூலம் ஒரு முனையிலிருந்து ஒருவர் பேசுவதை மற்றொரு முனையில் காது வைத்துக் கேட்பார்கள். தொலைபேசி நடை முறைக்கு வரும் வரை பேசும் குழாய்தான் பயன் படுத்தப்பட்டு வந்தது.

மாவீரன் அலெக்சாண்டர் செய்திகளைத் துாரத்திலுள்ளவர்களுக்குக் கேட்கச் செய்ய நீண்ட குழாய்களைப் பயன்படுத்தினார். வெகுகாலத்திற்குப் பிறகு உருவான மெகா'. போனுக்கு இந்தக் கருவிதான் முன்னோடி.

கி.மு.2900ல் சுமேரியர்கள் களிமண்ணின் மீது சிறுபடங்களைச் செதுக்கி தங்கள் கருத்துக்களை மற்றவர்கள் அறியச் செய்தார்கள். கி.மு. 1400ல் சீனர்கள் எலும்புகளின் மீது எழுதும் முறையைக் கண்டறிந்தார்கள். சீனர்களால் கி.மு. 2697ல் எழுதும் மை கண்டுபிடிக்கப்பட்டது. இது நாளடைவில் வளர்ச்சி பெற்று கி.மு.1200ல் பிரபல்யமானது. இந்த மையை கல்வெட்டுக்களின் மீது எழுத பயன்படுத்தினார்கள். கி.மு.1270 ல் சிரிய மொழியில் எழுதப்பட்ட உலகின் முதல் கலைக்களஞ்சியம் வெளியிடப் பட்டது

எகிப்தியர்கள், ரோமானியர்கள், கிரேக்கர்கள், ஹீப்ருக்கள் ஆட்டுத்தோலைப் பதப்படுத்தி அதில் எழுத ஆரம்பித்தார்கள். ரோமானியர்கள் ஒருவகைத் தடிமனான புல்லை எழுதுகோலைப் போலாக்கி அதைக்கொண்டு மையில் நனைத்து ஆட்டுத்தோலில் எழுதும் வழக்கத்தை உண்டாக்கினார்கள்.

கி.மு.900ல் உலகின் முதல் அரசாங்க தபால் சேவை சீனாவில் ஆரம்பிக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் நீண்ட வருடங்களாக உபயோகிக்கப்பட்டு வந்த ஓர் எழுதுகோல் இறகுப் பேனா. இது கி.மு.700ல் கண்டறியப்பட்டது. பறவைகளின் இடதுபக்கம் உள்ள இறக்கையிலிருந்து இறகுகள் எடுக்கப்பட்டன. இடது பக்க இறக்கையிலிருந்து எடுக்கப்பட்ட இறகைக் கொண்டு வலது கையால் எழுதுவது மிகவும் வசதியாக இருந்தது. வாத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகு, ஆந்தை, பருந்து, வான் கோழி போன்ற பறவைகளின் இறகுகள் எழுது கோலாகப் பயன் படுத்தப்பட்டு வந்தன. இத்தகைய இறகுப் பேனாக்களில் சில அசௌக ரியங்கள் இருந்தன. முதலாவதாக இவை ஒரு வாரத்திற்கு மட்டுமே பயன்பட்டன.

மேலும் இந்த இறகுகளை எழுதுகோலாக மாற்ற நீண்ட நாட்கள் பிடித்தன.

ஆரம்பத்தில் அனைவரும் பெரிய எழுத்துக்களிலேயே upper-case letters எழுதிக் கொண்டி ருந்தார்கள். கி.மு. 600ல் சிறிய எழுத்துக்கள் lowercase letters கண்டுபிடிக்கப்பட்டன.

கி.மு.530ல் கிரேக்க நாட்டில் உலகின் முதல் நூலகம் ஆரம்பிக்கப் பட்டது. கி.மு. 400ல் கிரேக்க எழுத்துக்கள் வடிவமைக்கப்பட்டன. முதன் முதலில் கிரேக்கர்களே இடது புறமிருந்து வலதுபுறம் எழுதும் முறையைப் பின்பற்றினார்கள். இதன் பின்னர் ரோமானியர்கள் தங்கள் எழுத்துக்களை வடிவமைத்தார்கள்.

கி.மு.105ல் சீனாவின் ட்சாய்லுன் என்பவர் காகிதத்தை கண்டுபிடித்தார். கி.பி.305ல் மரத்தி னாலான அச்சு இயந்திரம் சீனாவில் வடிவமைக்கப்பட்டது. மரத்தில் செதுக்கப்பட்ட அச்சுக்களை பயன் படுத்த ஆரம்பித்தார்கள்.

கிரேக்கர்கள், உலோகம், எலும்பு, தந்தம் போன்றவற்றைக் கொண்டு எழுத்தாணிகளை வடி வமைத்தார்கள். மெழுகு பூசப்பட்ட பலகையின் மீது இத்தகைய எழுத் தாணிகளால் எழுதி தங்கள் கருத்துக் களைப் பதிவு செய்தார்கள்.

முதன்முதலில் பேனாவைக் கண்டுபிடித்தவர்கள் ரோமானியர்கள் ஆவார்கள். இவர்கள் மெல்லிய மூங் கிலை வெட்டி அதன் ஒரு முனையை பேனாநிப்பைப் போல வடிவமைத் தார்கள். மூங்கிலுக்குள் இருக்கும் வெற்றறையில் மையை ஊற்றி எழுதும் முறையைக் கண்டறிந்து மூங்கில் பேனாக்களின் மூலம் எழுத ஆரம்பித்தார்கள்.

சாய்ந்த எழுத்து முறையை cursive handwriting கண்டறிந்தவர் வெனிஸ் நாட்டைச் சேர்ந்த அல்டஸ் மனுடியஸ் என்பவராவர். இவர் கி.பி.1495ல் இம் முறையைக் கண்டறிந்து அறிமுகப்படுத்தினார்.

1714ல் ஹென்றிமில் என்பவர் தட்டச்சு இயந்திரத்தை வடிவமைத்தார்.

1902ல் மார்க்கோனி உலகின் முதல் ரேடியோ அலை வரிசைக் குறியீட்டை ஒலிபரப்புச் செய்தார். இந்த முதல் ரேடியோ அலைவரிசைக் குறியீடு அட்லாண்டிக் கடலின் குறுக்கே ஒலிபரப்பப்பட்டது.

1958ஆண்டு செஸ்டெர் கார்ல்சன் என்பவர் ஜெராக்ஸ் இயந்தி ரத்தைக் கண்டுபிடித்தார். ஜெராக்ஸ் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் முக்கியமான ஆவணங்களை நகல் எடுப்பது சுலபமாக்கப்பட்டது. கிடைக்காத புத்தகங்களை இதன் மூலம் நகல் எடுப்பது மிகவும் உபயோகரமான ஒரு விஷயமாக ஆகிவிட்டது.

தற்போது உலகம் முழுவதும் சுமார் 5000 மொழிகள் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. பேச்சும் எழுத்தும் முக்கியமான தகவல் தொடர்பு சாதனங்களாகும். இவற்றை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஒருவரிடமிருந்து ஒரு கூட்டத்திற்குக்கொண்டு செல்ல தகவல் தொடர்பு சாதனங்கள் பயன் படுகின்றன. மனிதர்களின் எண்ணங் களைத் தகவல் தொடர்பு சாதனங்கள் பலவகைகளில் உலகம் முழுக்க அனைவருக்கும் கொண்டு சென்று சேர்க்கின்றன. தகவல் தொடர்பு சாதனங்களின் அபார வளர்ச்சி, தகவலை நொடிப்பொழுதில் உலகம் முழுக்கக் கொண்டு செல்லுகின்றது.

விலங்குகளிடமிருந்து மனிதர்களைப் பிரித்து மேம்படுத்திக் காட்டுவது மொழியாகும். மனிதன்தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வார்த்தைகளைச் சித்திர வடிவில் வடி வமைத்து உருவாக்கினான். இந்தச் சித்திரங்கள் நாளடைவில் எழுத்துக் களாக வளர்ச்சி பெற்றன. விவசாயம், தோட்டம், மரம், சூரியன் போன்ற வற்றை சித்திரங்களாக வடிவமைத்து தங்கள் கருத்தை ஆதிமனிதர்கள் வெளிப்படுத்தினார்கள்.

ஆதிகாலத்தில் எழுத்துக் கள் கல், எலும்பு, சுட்டமண் போன்ற வற்றில் பதிக்கப்பட்டதால் அவை நீண்டகாலம் அழியாமல் நமக்கு கிடைத்துள்ளன. இதிலிருந்து ஆதிமனிதர்களின் தகவல் தொடர்பு முறைகளை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆரம்பகாலங்களில் தகவல் கள் முரசு அறைந்து மக்களைக் கவர்ந்து தெரிவிக்கப்பட்டன. பின்னர் தகவல்கள் ஆட்கள் மூலமாகவும் குதிரைக்காரர்களின் மூலமாகவும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. பின்னர் செய்திகள் புறாக்களின் காலில் கட்டப்பட்டு பழக்கப்படுத்தப்பட்ட இடங்களுக்கு புறாக்களை அனுப்பி செய்திகள் அனுப்பப்பட்டன.

சுமார் 2500 ஆண்டுக ளுக்கு முன்னர் கிரேக்கர்களுக்கும் பெருசியர்களுக்கும் போர் நடை பெற்றது. போரில் கிரேக்கர்கள் வென்றார்கள். இந்த வெற்றிச் செய்தியை ஓர் ஓட்டக்காரர் மூலம் 35 மைல் தொலைவில் உள்ள ஏதென்சு நகருக்குத் தெரிவிக்கப் பட்டது. விரைவாகச் செய்தி அனுப்ப குதிரைக்காரர்கள் பயன்படுத்தப்பட் டார்கள். நீண்ட தொலைவுக்குச் செய்திகளை அனுப்ப புறாக்கள் பயன்படுத்தப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிகழ்வு ஒருவரையோ அல்லது பலரையோ சென்றடையும் போது அது செய்தி என்ற பெயரைப் பெறுகிறது. செய்திகளை மக்களுக்குக் கொண்டு செல்லும் சாதனங்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் எனப் படுகிறது.

தகவல் தொடர்புச் சாதனங்களின் அசுரவளர்ச்சி மிகப்பெரிய உலகத்தை மிகச் சிறிய கிராமமாக (Global Village) மாற்றி விட்டது என்றே சொல்லவேண்டும். முற்காலத்தில் ஒரு தகவலை மற்றொருவருக்குத் தெரிவிக்க பல மாதங்கள் பிடித்தன. குதிரை வீரர்கள் மூலமாகவோ அல்லது புறாக்கள் மூலமாகவோ தகவல்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. தூதர்கள் ஒரு நாட்டிலிருந்து மன்னர் தரும் தகவல்களை எடுத்துக்கொண்டு குதிரையில் பயணித்து மற்றொரு நாட்டு மன்னருக்குக் கொண்டு சென்று சேர்ப்பிப்பது வழக்கத்திலிருந்தது.

தரைவழி வாகனங்கள், வான்வழி வாகனங்கள், நீரில் செல்லும் வாகனங்கள் போன்றவை கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் தகவல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் காலம் மாதங்களிலிருந்து நாட்களாய்க் குறைந்தது. தொலைபேசி (Telephone) கணினி (Computer) பேக்ஸ் (Fax) போன்ற விஞ்ஞான சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நாட்கணக்கில் சென்றடைந்த தகவல்கள் நிமிடக்கணக்கில் சென்றடைந்தன. இதன் காரணமாக தகவல் தொடர்பைப் பொறுத்தவரை உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கி விட்டது என்ற கூற்றை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

## அரை நூற்றாண்டுக்கு முந்திய திருச்சபையின் ஆவணங்கள் திறக்கப்படுகின்றன

1922 ம் ஆண்டு முதல் 1939ம் ஆண்டு வரை திருத்தந்தையாகப் பணியாற்றிய 11ம் பத்திநாதரின் வத்திக்கான் ஆவணங்களைத் திறந்து ஆய்வு செய்ய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் ஒப்புதல் வழங்கியுள்ளார். அது 2ம் உலகப்போர் நடைபெற்ற, முசோலினி, ஹிட்லர், மற்றும் ஸ்ராலின் போன்றோர் ஆட்சி செய்த காலம். வத்திக்கானின் இந்த உத்தரவு வழியாக ஆராய்ச்சியாளர்கள் இக் காலங்களில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளையும் ஆவணங்களையும் ஆராய வத்திக்கான் காப்பகம் அனுமதி அளிக்கும்

20ம் நூற்றாண்டின் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராயும் நோக்கில் 11ம் பத்திநாதரின் ஆவணக் களஞ்சியம் எப்போது திறக்கப்படும் என்று ஆய்வாளர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து வந்தனர். இந்த ஆய்வுகள் வழியாக திருத்தந்தை 11ம் பத்திநாதர் பாசிச சர்வாதிகாரிகளுடன் எப்படி நடந்து கொண்டார், நாசிசத்துக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவு போன்ற பல புதிய கண்டுபிடிப்புகள் வெளியாகலாம்.

## வத்திக்கானின் புதிய வெளியுறவுச் செயலாளர்




இத்தாலியக் கர்தினால் டார்சிஸ் பெட்டோன் ஜெனோவா வத்திக்கானின் வெளியுறவுச் செயலாளராகத் திருத்தந்தையால் நியமிக்கப் பட்டுள்ளார். எழுபத்தியொரு வயதாகும் கர்தினால் பெட்டோனா 1995 முதல் 2002 வரை விசுவாசப் பரப்புதல் ஆணையத்தின் செயலாளராகப் பணியாற்றியவர். 2000ம் ஆண்டில் அமெரிக்காவில் குருக்களின் பாலியல் சர்ச்சை குறித்து வரைமுறைகள் வகுப்பதிலும் பாத்திமா இரகசியத்தை வெளியிடுவதிலும் முக்கிய பங்காற்றியவர். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இப்பதவியிலிருந்த கர்தினால் ஆஞ்சலோ சொடோனாவைத் தொடர்ந்து இப் பொறுப்பை ஏற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுக்கு வழிகாட்டு....!



கர்த்தரே!

மீண்டும் கத்திக் கத்தி எங்கள் கனவுகள்

கலையத் தொடங்கியாயிற்று.

ஆம், கனவிற்கூட கத்திகளில் ரத்தம்

எம் தலைகளில் சந்தேக முண்முடி

அநியாயப் பழிகளென்ற

அதிபாரச் சிலுவைகள் எம் தோளில்

புரட்சிச் சூரியனாய்ப் பூத்த

உன்வரவு கண்டு

எதேச்சதிகாரி ஏரோது கலங்கினான் அன்று

எழிற் பாலகனாகிய உன்னை

இனங்காண முடியாமல்

ஆண் சிசுக்களை மட்டும்

அழிக்கச் சொன்னான் அவன்

ஆனாலின்று எம்மண்ணில்

மக்கட் செல்வங்களை மட்டுமல்லாது

மாதாப் பிதாக்களையு மல்லவா

பிளந்து தொங்க விடுகிறார்கள்

புதிய ஏரோதுக்கள்!

கொண்டு வந்து தாமே வைத்துவிட்டுக்

கண்டு பிடித்ததாகக் கதை விடுகின்றார்கள்.

தஞ்சமடைந்த மக்கள் மீதும்

வஞ்சம் தீர்க்கின்றார்கள்

தேவதாயாரைத் திரு முழுக்காட்டுகிறார்கள்

அப்பாவி மக்களின் குருதியினால்

கரையில் மட்டுமல்லாது

இரையுங் கடல்மீதும்

இராட்சதர்களின் வெறியாட்டங்கள்

கடற்கரையில்

அறுந்து கிடப்பவை தாழங்குலைகளல்ல,

தமிழரின் தலைகள்.

சுவாமி!

ஒருமுறைதானே நீ

மனுமகனாய்ப் பிறந்தாய்,

மறுமுறை ஒருக்கால் பிறக்க

ஏன் மறந்தாய்?

ஆம்! ஒரேயொரு ஏரோதினாலேயே

எத்தனையோ இன்னல்களைச்சுமந்த

இயேசுவே இன்று

எண்ணிக்கையற்ற ஏரோதுக்கள்

மண்ணிற் புரள்கையில்

ஐயா நீர்

விண்ணை விட்டிறங்காதிருப்பதுதான் விவேகம்.

ஏனெனில்!

ஆதிக்க வெறியர்கள்

உன்னைப் போதிக்கவும் விடமாட்டார்.

தலையைத் தறித்தெடுத்துத்

தனியாக உடல்வைத்தால்

மூன்றாம் நாள் உயிர்த்தெழவும்

முடியாமல் போய் விடலாம்.

ஆதலினால்

விண்ணில் இருந்தே

விடியலுக்கு வழிகாட்டு.

கவிஞர் நிலா தமிழின்தாசன்.
கல்லடிவீதி, களுதாவளை -01
களுவாஞ்சிக்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விசுவாச வாழ்வுக்குக் கிறிஸ்தவர்களாகிய எமக்கு அழைப்பு**

**பொறுப்பை நிறைவேற்றிய உத்தமி:**

நசரேத்தில் வாழ்ந்த சுவக்கீனுக்கும், அன்னம் மாளுக்கும் மகளாகப் பிறந்தார் மரியாள். அவர் மீட்பரின் அன்னையாக விரும்பியவளல்ல. ஆனால், அப்பொறுப் பையேற்க இறைவன் அழைத்தபோது (லூக்கா 1: 30-31) அப்பொறுப்பைத் தான் ஏற்கத் தகுதி யானவரா என நினைத்துச் சற்றுப் பின் வாங்கினார். ஆனாலும், இறைதூதரின் வார்த்தைகளை (லூக்கா 1:35) ஏற்று இறைசித்தத்துக்குக் கீழ்ப்படிந்தார். (லூக்கா 1:38) இப்பொறுப்புப் பாரதூரமானது ஆனால், இறைவன் மீது முழு நம்பிக்கை கொண்டார். தன் பொறுப்பை மிக உன்னத முறையில் இறுதிவரை ஆற்றிமுடித்தாள்.

- இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்துச் செயற்படுகையில் மனிதத் தன்மைக்கு மேலான ஒரு சக்தியை அனுபவத்தில் காணலாம்.
- அழைப்பு நினையாத விதத்தில், எதிர்பாராத நேரத்தில் எமக்கு ஒரு சவாலாக வரலாம். அந்த அழைப்பு எமது வாழ்வின் குறைநிறைகள், பலவீனங்கள் போன்றவற்றினூடாகவும் செயற்படும்.

**மனித உழைப்பின் உன்னத அடையாளம்:**

தச்சுத்தொழிலில் ஈடுபட்டுத் தன் குடும்பத் தைக் காத்தார், புனித சூசையப்பர். இயேசுவின் வளர்ப் புத்தந்தையாகவும், மரியாளின் கணவராகவுமிருந்து திருக்குடும்பத்தின் பொறுப்புக்களை வாழ்நாள் முழுவ தும் நிறைவேற்றினார். தனது தொழிலை இறைவனுக்கு ஏற்புடையதாகச் செய்தார்.

- உழைப்பு ஓர் உன்னத செயலாகும். அது இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட மாபெரும் பொறுப்பாகும். மக்களுக்காக, நாட்டுக்காக என்று உழைக்கும் போது இப்பொறுப்பை நிறைவேற்றுகி றோம்.
- மனித உழைப்பின் வலு, எந்திர வலுவையும் விடமேலாக இருக்கக் காரணம், அது இறை வனால் அளிக்கப்பட்ட ஒரு கொடையாகும் என் பதே. எனவே, சிறு வயதிலிருந்தே உழைப்பைப் பழகிக் கொள்ளவேண்டும்.
- மனிதன் தனது குடும்பத்தை நடத்தவும், இறைவனின் படைப்பைப் பூரணப்படுத்தும் பங்காளியாகவும் தனது சக்தியைப் பயன்படுத்தி உழைக்கிறான்.
- சூசையப்பரும் தனது உழைப்பின்மூலம் மீட்புத்திட்டத்தில் பங்கு கொண்டார்.

**மனித உழைப்பைப்பற்றிய விடயங்கள்:**

1. மனித உழைப்பானது பௌதிகப் பொருட்களை விட மதிப்பானது.
2. மனித உழைப்புக்கேற்ற கூலியைக் கொடுத்தல் வேண்டும்.
3. உழைப்பைச் சூறையாடுவது மாபெரும் குற்ற மாகும்.
4. உழைப்பாளிகளின் ஆண், பெண் வேறுபாடும், வயதெல்லையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.
5. உழைப்பவர் தன் உரிமையைப் பெற அஹிம்சை வழியில் முயற்சி செய்யலாம்.
6. உழைப்பவர்க்கு விடுமுறை, ஓய்வு போன்றவற்றைக் கொடுத்து அவர்களது உடல் நலத்தைப் பேணவேண்டும்.

**திருச்சபையில் மேய்ப்புப் பணித் தலைமைத்துவம்:**

- கலிலேயாக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பேதுரு ஒரு மீனவர். ஆனாலும், அவரது வாழ்வில் இயேசுவைச் சந்தித்தமை ஒரு விசேட நிகழ்வானது. மனிதரைப் பிடிக்கத் தன்னைப் பின்செல்ல இயேசுவால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. (லூக்கா 5:10)
- உயிர்ப்பின் பின் சீடர்கள் ஏழு பேருக்கு மும்முறை காட்சியளித்து அவர்களோடு உண்டபின் சீமோன் பேதுருவை நோக்கி, "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களை விட மிகுதியாக என் மீது அன்பு செலுத்துகிறாயா" என்று கேட்டார். ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே என்றார். இயேசு "என் ஆடுகளைப் பேணி வளர். என் ஆடுகளின் ஆயனாவாய்" என்றார். (யோவான் 21:15-17)
- பெந்தகோஸ்து தினத்தன்று செனாக்கொலு மண்டபத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டபின் திருச்சபை முழு உலகிலும் பரவியது. பேதுரு தூய ஆவியின் வரத்தால் போதித்தார். அதன் பிரதிபலனாக ஏராளமானோர் கிறிஸ்துவைப் பின்பற்றினர். பூரண அர்ப்பணிப்பு, நேர்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்புப்பு போன்ற குணங்களைக் கொண்ட பேதுரு சபையில் பிரச்சினைகள் எழுந்தபோது நேர்மையான தலைவனாக இறைவனுள் தங்கியிருந்து தீர்மானங்களை எடுத்தார். திருச்சபையின் முதல் பாப்பரசராகிய இவர் தம் வாழ்வையே இறை இயேசுவுக்காக அர்ப்பணித்தார்.

❖ கிறிஸ்தவரான நாமும் இறையரசை வெளிப் படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பாடசாலை மாணவர் என்ற முறையில் அர்ப்பணிப்பை நிறைவேற்ற வாய்ப்புகள் ஏற்படும் அவை:

1. குடும்பத்தில் செபித்து வாழ்வதற்குப் புத்துயிர் அளித்தல்.
2. குடும்பத்தில் அன்பின் சமூகத்தைக் கட்டியெ முப்புதல்.
3. குடும்பத்தவருக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது மகிழ்வுடன் அதைச் செய்ய முன்வருதல்.
4. பாடசாலையினுள் சகமாணவருடன் அன்பு டனும், சமாதானத்துடனும் நெருங்கி வாழ்தல்.
5. பாடசாலையில் சமய சம்பந்தமான நிகழ்ச்சி களில் முன் நின்று செயற்படல்.
6. பாடசாலையில் சமயக் கழகங்களில் அங்கத்த வராக முன்னின்று செயற்படல்.

❖ உமது வாழ்வில் கஷ்டம், துன்பம், வேதனை போன்ற சவால்களுக்கு மத்தியில் இறைவனின் சித்தத்திற்கு இடமளித்து உம்மால் செய்யக்கூடிய தைச் செய்து இறைவனில் வாழத் தூய ஆவியின் வரத்தைக் கேட்டுச் செபித்தல் வேண்டும்.

- மெற்றில்டா -

# தொடர்பாடலையும் ஒன்றிப்பையும் ஒத்துழைப்பையும் எளிதாக்கும் வலைப்பின்னலாக சமூகத் தொடர்புக்கருவிகள் விளங்குகின்றன.

—உலகத்தொடர்புத் தினத்துக்கான செய்தியில் திருத்தந்தை.



இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடை பெற்ற நாற்பதாவது ஆண்டு நிறைவில் சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றிய தீர்வுத் தொகுப்பை நினைவு கூர்ந்த திருத்தந்தை அவர்கள், தொடர்பாடலுக்குரிய ஆற்றலை மனித இனத்தின் நன்மை குறித்து நெறிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்தமது செய்தியில் கிறிஸ்துவின் வழியாக இறை குடும்பத்தில் ஒன்றாகியுள்ள நாம், எம்மில் விளங்கும் அவரது ஊக்கம் மிக்க ஆற்றலை அடையாளம் கண்டு அதனை பிறருக்குப் பரப்புவதன் மூலம் அவரது அன்பை உலகில் மேலோங்கச் செய்ய முடியும். தொடர்பாடலில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியானது இடத்தொலைவை வென்று விட்டதானாலும் ஒத்துழைப்பையும் ஒன்றிணைந்த வாழ்வையும் வளர்த்துள்ளது என்று சொல்வதற்கில்லை. உண்மையான தொடர்பாடலானது கொள்கை மிக்க ஆர்வத்தையும் தீர்மானத்தையும் வேண்டி நிற்கின்றது. உண்மைகளைத் தேடுவதையும் அதனைப் பரப்புவதையும் இன்றியமையாததாக்குகின்றது. இப்பணியில் பல சவால்களை நாம் எதிர் கொள்ள வேண்டும்.

தொடர்பு சாதனங்கள் திருமணம், குடும்பவாழ்வு போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவை ஒவ்வொரு கலாசாரத்தினதும், சமூகத்தினதும் அடித்தளமாக இருக்கின்றது. குழந்தைகளை மனித வாழ்வின் மற்றும் அன்பின் முன் மாதிரிகையாக உருவாக்குவதில் அளப்பெரிய பங்காற்ற வேண்டும்.

இறுதியாகக் கற்றல், பரிமாற்றம், ஒருமைப்பாடு போன்றவற்றினூடாக உரையாடலை மேற்கொண்டு தொடர்பாடலைச் சீர் செய்வது சிறந்த முறையாகும். இதன் மூலம் செல்வாக்கு மிக்க, பாராட்டப்படக்கூடிய வளங்களாக இருந்து மக்கள் எல்லோரும் விரும்புகின்ற அன்பு நாகரீகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.


பிளவு படுத்தும் சுவர்களைத்தகர்த்து ஐக்கிய அன்பைக் கட்டி யெழுப்புவோம். இவ்வாறு தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜனநாயக முகமூடிகள்

## ஓர் அரசியல் பார்வை



சமாதான ஒப்பந்தத்தைக் கிழித்தெறி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை வெளியேற்று, யுத்தத்தை உடனே தொடங்கு என்ற இனவாதிகளின் கூக்குரல்களுக்கு அடிபணிந்துவிட்டது போல் அரசு அந்த மாவிலாறு பிரச்சனையைச் சாட்டாக வைத்து யுத்த மொன்றை ஆரம்பித்துவிட்டது.

அண்மைக் காலமாக அதிகரித்து வந்த படுகொலைகளும், குண்டுவெடிப்புகளும், ஆங்காங்கே இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களும் போருக்குக் கட்டியம் கூறிக் கொண்டுதானிருந்தன. இன்று அது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கொடிய யுத்தமாகவும் , ஏனைய பிரதேசங்களில் குண்டுவெடிப்புக்கள், மற்றும் வன்முறைகளாகவும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போரில் நேரடியாக ஈடுபட்டுள்ள இராணுவத்தினரையும் புலிகளையும் விட பெரிதும் பாதிக்கப்பட்டு நொந்து துடிப்பவர்கள் அப்பாவிப் பொதுமக்களே. வடக்கிலும், கிழக்கிலும் இந்த யுத்தத்தினால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் இன்னும் பல நூறு பேர் படுகாயங்களுக்குள்ளாகியும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடு வாசல்களை இழந்து இடம் பெயர்ந்தும் அநாதரவாக நிற்கின்றனர். முல்லைத் தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் அறுபதுக்கு மேற்பட்டோர் விமானக் குண்டு வீச்சிற்குப் பலியாகி இருப்பது அறிந்து முழு உலகமே துடித்துப் போயிருக்கிறது. மூதூரில் பாதிக்கப் பட்ட மக்களுக்குப் பணியாற்றிக் கொண்டிருந்த தனியார் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் பதினேழு பேர் படுகொலை செய்யப் பட்ட செய்தி ஆறுவதற்குள் பள்ளி செல்லும் மாணவியர் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இதனை மறைக்கவும், திரிபுபடுத்தவும் எத்தனை முயன்றும் முடியாமல் தடுமாறிய வேடிக்கையைக் காணமுடிந்தது. அவசர அவசரமாக அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுதலை விட்டதிலிருந்து என்னதான் பூசி மெழுகினாலும் நிலைமை எவ்வளவு பாரதூரமானது என்பதை எல்லோருமே ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பது வெட்ட வெளிச்சமாகியது.



மக்களைப் பாதுகாக்கவும், விடுவிக்கவுமே இந்த யுத்தம், சமாதனப் பேச்சுவார்த்தைக்கு நாம் இன்னும் ஆவலாகவே இருக்கின்றோம் என்று கூறிக்கொண்டே யுத்தத்திற்கு முனைப்புக் காட்டுவதும் சொந்த நாட்டு மக்களையே குண்டு வீசி அழிப்பதும் நடைபெறுகிறது என்றால் நாம் இதனை எவ்வாறு புரிந்து கொள்வது? சமாதானம், பேச்சுவார்த்தை என்ற சொல்லாடல்கள் எல்லாம் தீர்மானம் ஒன்றுக்கு வராது பேசிப் பேசியே காலத்தை நீடிப்பதற்கும் அவ்வப்போது குற்றங்கள் கண்டுபிடித்து குண்டுவீசி அழிப்பதற்குமான ஒரு பொறியாகவே பயன்படுத்தப் படுகிறது என்று கொள்ளுவதா?



யுத்தம் என்பது எப்போதுமே தீர்வுக்கு வழியாகா என்று சர்வதேச சமூகம் எப்படித்தான் இடித்து இடித்துச் சொன்னாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. சமாதானத் தீர்வுகாண விரும்புபவர்கள் யுத்தத்தை நாடமாட்டார்கள் ; அடுத்தவரைத் தீர்த்துக் கட்ட விரும்புபவர்கள் யுத்தத்தை விட்டுவிட விரும்ப மாட்டார்கள். ஏனென்றால் இவர்கள் விரும்புவது அழிவிலிருந்து பிறக்கும் சமாதானத்தையே. இந்தச் சுடுகாட்டுச் சமாதானத்தில் சாம்பலாவது அப்பாவி மக்கள்தானே. மக்களின் அழிவு பற்றி இனவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் என்றுமே கவலைப்பட்ட தில்லை. தமது சுயநல அரசியலுக்காக எத்தகைய படுபாதகத்தையும் ஜனநாயகத்தின் பெயரால் கூசாமல் செய்வார்கள். ஜனநாயகம் என்பது அனைத்து மக்களுக் குமான சம உரிமை என்ற நிலைமாறி ஏகாதிபத்திய சர்வாதிகாரம் அணிந்து கொள்ளும் முகமூடி என்ப தையே இன்று உலகெங்கும் காணக்கூடியதாயுள்ளது. பயங்காரவாத எதிர்ப்பு என்ற பெயரில் மத்தியகிழக்கு நாடுகளில் அமெரிக்க முதாலாளித்துவமும் சியோனிஸ் டுகளும் புரிந்து வரும் கொடுமைகள் இதற்கு நல்ல சான்று. இலங்கையில் காணப்படும் இனவாத ஏகாதிபத்தியமும்இந்தச் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஒரு பிரிவே. இதனால் தான் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வல்லரசு நாடுகளுக்கு இலங்கை எப்போதுமே செல்லப்பிள்ளையாக இருக்க முடிகிறது. ஆனால் மக்கள் சக்தி என்பது மகத்துவமானது. அது முழுப்பலத்தோடு விழித்துக்கொள்ளும் போது எதுவுமே அதற்கு முன் தாக்குப் பிடிக்க முடியாது. வரலாற்றில் இதற்கு எத்தனை சான்றுகள்?. வரிசையாகச் சொல்லலாமே! இனவாத மனநோய் பிடித்த அரசியல்வாதிகள் வரலாற்றிலிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ளாவிட்டால், மனநோயி லிருந்து விடுபடாவிட்டால் வரலாறு இவர்களை கறை படிந்த கரும்புள்ளிகளாகவே அடையாளப்படுத்தும்.

*– திருமூலன் –*

# மறைந்தார் ஒரு பணியாளர்



மட்டக்களப்பு மண்ணில் பிறந்த ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. பெரியதம்பி மரியான் தம்பி ஜோசப் அவர்கள் (திரு. P.M.ஜோசப்) வத்த ளையில் 05.08.2006 அன்று சனிக்கிழமை இறைபதமடைந்தார். இறக்கும்போது இவருக்கு 95 வயது. மட்டுநகரின் மூத்த மனிதரில் ஒருவர் இவர். அத்துடன் ஒரு பங்குப் பணியாளராகவும் செயலாற்றியவர். இவர் மட்டக்களப்பு - புளியந்தீவிலே 24.10.1911 அன்று பிறந்தார். ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். ஆசிரியத் தொழிலையே சார்ந்த மரியசெல்வம் (செல்லக்கா) என்பவரை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார்.

திருமணத்தின் பின் கோட்டை முனையில் வசிக்க ஆரம்பித்தார். புளியந்தீவுப் பங்கிலிருக்கையில் மரியாயின் சேனையை ஆரம்பித்திருந்தார். அன்னை மரியாவிலும், அவர்மகன் இயேசுவிலும் பக்தி மிகுந்தவர். புளியடிக்குடாப்பங்கில் வசிக்கத் தொடங்கியதும் இவரது அப்போஸ்தலிக்கப் பணியும் விரிவடைந்தது. இல்லங்கள் தோறும் சென்று மக்களைத் தரிசிப்பதில் ஆர்வங் காட்டினார். இதன் பயனாகப் புளியடிக்குடாப்பங்கில் 03.11.1961 அன்று முதல் சகல புனிதர்களின் இராக்கினி மாதா பிரசீடியம் எனப்பெயர் கொண்ட மரியாயின் சேனை வளர்ந்தோர் பிரசீடியத்தை ஆரம்பித்தார். இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் அப் போதைய பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த அருட்பணி. A. செலர் அடிகளாவார். சிறிது காலத்தின் பின் ஏற்கனவே இயங்கிக்கொண்டிருந்த புனித வின்சன் டி பவுல் தரும் சபையை முன்னேற்றம் பெறச் செய்வதி லீடுபட்டார். 1993ம் வருடத்திலே திரு இருதயப் பக்திச் சபையினையும் ஆரம்பித்தார். திரு இருதய ஸ்தாபகத்தை இல்லங்கள் தோறும் நிலைபெறச்செய்ய வைப்பதில் அயராது ஈடுபட இச்சபையைப் பயன் படுத்தினார்.

அத்துடன் ஓய்ந்துவிடாமல், சிறுபிள்ளைகளைக் கவனிக்கவேண்டும். அவர்களை அன்னை மரியாவின் தயவுபெறச் செய்யவேண்டும் என்ற தம் எண்ணத்தைச் செயல்வடிவமாக்கிடப் பெற்றோர் பலரைச் சந்தித்துக் கதைத்ததன் பயனாக 31.05.1995 அன்று 19 சிறுவருடன் மரியாயின் சேனை பாலர் பிரசீடியத்தையும் ஆரம்பித்து வைத்தார். இப்பிரசீடியத்தின் அங்கத்தவரில் 2 சகோதரிகள் ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையில் துறவறப் பணிக்கென இணைந்துள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாலர் பிரசீடியம் இப்போதும் தொடர்ந்து செயற்பட்டு வரும் அதேவேளை, ஏற்கனவே இருந்த பாலர் பிரசீடியமானது வயதெல்லை காரணமாக, தற்போது இளைஞர் பிரசீடியமாக உருமாறிச் செயற் படுகிறது. இவ்வாறு இவரது வாழ்நாளில் கூடுதலான நேரம் சேவையிலும், செபத்திலும் செலவிட்டவர் இவர். "நல்லவை நிலைக்கும்" என்பதற்கொப்ப இவரால் ஆரம்பிக்கப்பட்ட சபைகளனைத்தும் இன்றுவரை சேவை மணம் பரப்பி வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இவர் இறந்த 8ம் நாள் நினைவஞ்சலித் திருப்பலி, புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தில் 12.08.2006 அன்று சனிக்கிழமை காலை 6மணிக்கு இடம் பெற்றது. இது சகல புனிதர்களின் இராக்கினிமாதா-வளர்ந்தோர், இளைஞர், பாலர் பிரசீடியங்களின் அங்கத்தவர்களாலும், திரு இருதயப் பக்திச் சபையி னராலும் சிறப்பிக்கப்பட்டது. இவர் தம் வாழ்நாளில் புரிந்த நன்மைகளை இறைவன் திருக்கண்ணோக்கி, இவரது பாவங்களை மன்னித்து, இவரது ஆன்மாவை இறையரசினுள் ஏற்றருள அனைவரையும் செபிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:- செல்வி:- மற்றில்டா இராஜேந்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இறைவாக்கினர்கள் காலம் (கி.மு 800-400)

பழைய ஏற்பாட்டில் நான்கில் ஒரு பகுதி இறைவாக்கினர்கள் நூலாக உள்ளது. இவை தவிர விவிலியத்தின் பல்வேறு பகுதிகளில் இறைவாக்கினர்கள், அவர்கள் பணியாற்றிய குறிப்புகள் பல உள்ளன. இறைவாக்கினர் எனும் சொல்லின் பதம் "இறைவாக்கை உடையவர்" என்பதாகும். அதாவது இறைவனுக்காகப் பேசுபவர், இறைவன் வெளிப்படுத்துவதையே சொல்லு பவர் எனப்படும்.

இறைவாக்கினர் காலம் கி.மு 8ம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு 4ம் நூற்றாண்டு வரை எனக் கூறப்படு கிறது. இதற்கு முன்னரும் பின்னரும் இறைவாக்கினர் இருக்கவில்லை என்றல்ல. மோசே, முதல் இறைவாக் கினர் எனவும் திருமுழுக்கு யோவானே இறுதி இறைவாக் கினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இருப்பினும் கி.மு 8ம் நூற்றாண்டு முதல்தான் இறைவாக்குரைத்தல் ஒரு சிறந்த திருப்பணியாகக் கருதப்பட்டது. இறைவாக் கினர்கள் இறைவனின் தனிச் சிறப்புப் பெற்ற தூதுவரா கவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இக்காலப் பகுதியிலேயே இவ் இறைவாக்குப் பணி முக்கியத்துவம் பெற்ற காலமாகக் கருதப்படுகிறது.

இக்காலப்பகுதியிலேயே இஸ்ராயல் மக்க ளுக்கு இறைவாக்கினரின் பணி தேவையாய் இருந்தது. எனினும், எல்லா இறைவாக்கினரின் பணியும் எழுத்து வடிவம் பெறவில்லை. வரையறைக்குட்பட்டதாய் பதினாறு இறைவாக்கினர்கள் பணி பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளது. அவர்கள் நான்கு பெரிய இறைவாக் கினர்களும், பன்னிரு சிறிய இறைவாக்கினர்களுமாக வகுக்கப்படுகின்றனர். மிக நீண்ட நூலை எழுதியதால் நான்கு இறைவாக்கினர்களும் பெரிய இறைவாக்கி னர்களாக் கணிக்கப்படுகின்றனர். இவ்வாறு பெரிய இறைவாக்கினர்கள் வாழ்ந்த காலம் இறைவாக்கினர் களின் பொற்காலமாய்க் கருதப்படுகிறது.

இறைவாக்கினரை எபிரேய மொழியில் "நபி" என்றழைப்பர். "நபி" என்றால் அறிவித்தல் என்பது பொருள். எனவேதான், இறைவாக்கினரை அறிவிப்பவர் என்றழைத்தனர். பழைய ஏற்பாட்டில் 'நபி' எனும் எபிரேயச் சொல்லுக்கு, பக்தன், குறிசொல்வோன், மந்திரவாதி, ஆவேசம் கொள்பவன், ஆட்கொள்ளப்பட்டவன், போலி இறைவாக்கினர் எனப் பல பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இத்தகையோர் திருத்தலங்களில் ஒன்று கூடி பலிசெலுத்தி, இறைவனது ஆணையை எடுத்துக்கூறி, இறை விருப்பத்தை மக்களுக்கு அறிவித்து, மன்ன ருக்கும், மக்களுக்கும் ஆலோசனை வழங்கிவந்தனர். இவர்கள் அசரீரிமூலமோ, குறி சொல்லியோ, சகுனம் உரைத்தோ, மந்திரம் கூறியோ மக்களின் வினாக்களுக்கு விடையளித்து, ஆடிப்பாடி எளிதில் உணர்ச்சி வசப்பட்டு, குடித்துக் கும்மாளம் போட்டு தம்மை மறந்து பேசியும், செயற்பட்டும் வந்தனர். இத்தகைய நபிகள் இஸ்ர யேலைச் சுற்றி வாழ்ந்து வந்தனர். இஸ்ராயேலரின் இறைவாக்கினர்கள் தங்களை இத்தகையவர்களுடன் இணைத்துக் கொள்ள விரும்பவில்லை, இதனால் தான், ஆமோஸ் இறைவாக்கினர். "நாம் நபியும் அன்று அக்கூட்ட த்தைச் சார்ந்தவனும் அல்ல" என்று கடிந்து கூறுகிறார்.

தாம்விரும்பிய ஒவ்வொரு இறைவாக்கினர் களையும் இறைவன் அழைக்கும் போது பல்வேறுபட்ட தன்மைகளிலேயே அழைக்கிறார். கனவுமூலம், காட்சி கள்மூலம், மயக்க நிலையில், இறைவனின் தூதர்கள் மூலம் எனப் பல்வேறுபட்ட தன்மைகள்மூலம். இவ்வாறு தாம் தெரிந்து கொண்ட இறைவாக்கினர்களை இறைவன் தொடக்கத்திலிருந்தே திடப்படுத்துகிறார். இத்தகைய வர்கள் இறைவனின் திட்டத்தை, எண்ணத்தை அவரிடம் இருந்து அறிந்து பின் நடக்க இருப்பதை முன்னரே இறைவாக்குரைத்து உண்மையான இறைவாக்கினராய்த் திகழ்ந்தனர். இவர்கள் வரையறைக்குட்பட்ட உண்மை இறைவாக்கினராவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




R. ஸ்ரான்லி பிரபாகரன்

## மனித ஆளுமை

மனிதனின் உடல், உளம், நடத்தை போன்றவற்றை ஒன்றாக இணைத்து ஒரு முழுமையைத் தரத்தக்க வடிவம் எது என்ற எதிர்பார்ப்புடன் மனிதனை நோக்குகின்ற தன்மை ஒன்று உள்ளது. நல்லவர் யார், முழுமையானவர் யார் என்றெல்லாம் நாம் சிந்தித்து பலவேளைகளில் மற்றவர்களோடு பழக ஆரம்பிக்கின்றோம். சிலவேளைகளில் எம்மை நாமே சோதனை செய்து கொள்வதுமுண்டு. இத்தகைய, மனிதனைத் தேடுகின்ற முயற்சிகள் அறிவியல் மட்டத்திலும், சாதாரண மட்டத்திலும் இடம்பெறுகின்றது.

இம்முறை "மனக்கோலத்தில்" அருட்சகோதரி யோசவ்வா யோசவ் அவர்கள் மிக முக்கியமான உளவியலாளரான "சிக்மன்ட் புறொயிட்" என்பவரின் "ஆளுமையின் அமைப்பு" பற்றிய கருத்தினைக் கூறுகின்றார். மனித ஆளுமைபற்றி பல அறிஞர்களும் பல கருத்துக்களைக் கூறுகின்றார்கள். அவற்றுள் ஓர் அறிஞரின் கருத்தைத் தான் இன்றய கட்டுரையில் காண்கின்றோம். ஆளுமை என்கின்ற இந்தப்பதம் ஆங்கிலத்தில் PERSONALITY என்றபதத்தால் குறிக்கப் படுகின்றது. எனினும் நம்முள் பலர் மனித ஆளுமையையும் புறத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட "Handsome" என்பதையும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்துகின்றனர். எனவே, மனித ஆளுமைபற்றி இம்முறையும், இதனைத் தொடர்ந்துவரும் தகவல்களின் அடிப்படையில் மனித ஆளுமையின் ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ளமுடியும். எம்மை நாமே இனங்கண்டு கொள்ள இக் கட்டுரைத் தொடர் பேருதவியாக அமையும்.

**ஆளுமையின் அமைப்பு** -- Sigmund Freud

சிக்மன்ட புறொயிட், ஆளுமையானது மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது என்றும், ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு இயக்கத் தொழிற்பாடுகளையும் கொண்டுள்ளது எனவும் கருத்து வெளியிட்டார். ஒரு மனிதனில் இம்மூன்று பிரிவுகளும் சரியான காலங்களில் தொழிற்படும் போது அம்மனிதன் சீராக்கம் அடைந்த தனியாள் எனக் கணிக்கப்படுகின்றான். இவை மூன்று Id, Ego, Super Ego என்பவையாகும்.

### 1. இத் (Id) / இன்பக் கொள்கை (Pleasure Principle)

பிறப்பிலே தோற்றுவிக்கப்பட்ட ஆளுமையின் முதற்படியே Id ஆகும். இது குழந்தைகளில் விருத்தியாகும் ஆளுமை ஆகும். "இத்" இன் தன்மை 'உடனடியாகவே தேவைகளைத் தணிக்க விரும்புவதாகும்'. உயிரியற் தேவைகளான உணவு உண்ணல், கழிவகற்றல், உறக்கம், நோ/வலிகளில் இருந்து தவிர்த்துக் கொள்ளல், பாலியல் இன்பம் போன்றவற்றினை உடனடியாகவே பூர்த்தி செய்து திருப்தியைக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

இது குழந்தைத் தன்மையுடைய ஆளுமைப் பிரிவாகும். இங்கே வாழ்க்கை அனுபவம், சிந்தித்தல் முதலானவற்றின் மூலமாக கற்றல் இடம் பெறாத தன்மையாகும். இத்தன்மை குழந்தைகளில் மாத்திரமல்ல, வளர்ந்தவர்களிலும்கூட, ஆனால் மறைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. எனினும் வளர்ந்தவர்களில் இது வெளிப்பட்டு விடுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. அதாவது பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியங்களில் ஈடுபடுகின்ற போதும், சுய நலமுள்ள காரியங்களில் ஈடுபடுகின்றபோதும், மன எழுச்சிகள் உச்சக் கட்டங்களிலும் இவை வெளிப்பட்டு பெரியவர்களைச் சமூக விரோதக் காரியங்களில் ஈடுபடவும் தூண்டுகின்றது.

உதாரணம் - கொலை, களவு, பொய்கூறுதல், பாலியல் வன்முறை, விபச்சாரம்.

### 2. ஈகோ (Ego)

**உண்மைக் கொள்கை** (Reality Principle)

இதுதான் நாம் வெளிப்படையாக உணருகின்ற மனதின் பகுதியாகும். இது அறிவுக்குரிய செயல்களுடன் தொடர்புடையதாகும். சந்தர்ப்பம், சூழ்நிலையை அறிந்து எண்ணங்கள், செயல்கள், உணர்ச்சிகள் என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவற்றை ஒழுங்குபடுத்தி; பிரச்சினைகளைக் கையாள்வதிலும், ஆளுமை குலையாமல் பார்த்துக் கொள்வதிலும் "ஈகோ" அக்கறை காட்டுகின்றது. இது "Id" பிரிவுடனும் வெளி உலகுடனும் தொடர்பு டையதாகும். மனிதனுக்குள்ளேயே இருந்து பிறக்கின்ற உடனடியாக எதிர்பார்க்கின்ற இன்பங் களை ஈகோ தடைசெய்கின்றது.

உதாரணம் - பசிக்காக அழுது உடனடியாகவே தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகின்ற குழந்தையானது காலப் போக்கில் உணவு வரும் வரைக்கும் காத்திருக்கவும் கற்றுக் கொள்கின்றது.

கண்ட இடங்களில் மலம், சலம் கழித்த குழந்தை உரியமுறையில் பழகிக் கொள்கின்றது. பிழையான செயல்களை "இத்" ஆற்றும் போது, "ஈகோ" அதனைக் கட்டுப்படுத்துகின்றது. இது ஒரு 'நடுநிலை வாதி' ஆகும். ஏனெனில், "இத்" க்கும் "சுப்பர் ஈகோவுக்கும்" இடையில் இருந்து நடுநிலையாகச் செயற்படுகின்றது.

**3. சுப்பர் ஈகோ** (Super Ego) /

**நீதிக்கொள்கை** (Moral Principle).

இது ஆளுமையின் மூன்றாம் படிநிலை யாகும். 5 வயதளவில் விருத்தியடையும் சுப்பர் ஈகோ ஒருமனிதனை சமூதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய பூரணத்துவம் அடையும் நிலைக்குக் கொண்டு செல்கின்றது. ஒரு பிள்ளை பெற்றோரிடம் இருந்தும் சமூகத்திடம் இருந்தும் நல்லது எது, கெட்டது எது, நீதி எது, அநீதி எது, எவை உலகத்தில் செய்யக்கூடிய காரியங்கள், செய்யக் கூடாதவை எவை என்பதைக் கற்றுக் கொண்டு பிரித்தறிந்து நல்ல வழியில் நடக்க Super Ego வழிகாட்டுகின்றது. இதனைக் கண்டிப்பு நிறைந்த மேற்பார்வையாளர் என வர்ணிக்க முடியும். உலக நடைமுறைகளு டனும், கலாசார விழுமியங்கள், ஒழுக்க நெறிகள் என்பனவற்றுடனும், Egoவின் செயல்கள் ஒத்துப் போகின்றதா என்பதைக் கண்காணித்துக் கொள் கின்றது எனலாம். இது "மனச்சாட்சி" போன்றது.

எனவே, இந்த மூன்று பிரிவுகளையும் சுருக்கமாக விளக்குவதாயின் பசியோடு வருகின்ற ஒருவனை எதையாவது உண்டு உடனே பசியாற்றத் தூண்டுவது "இத்"; முறையான உணவை எவ் வழியிலேனும் அடைந்து உண்ணச் சொல்லுவது 'ஈகோ"; உணவைச்சரியான வழியில் உண்ண உரைப்பது "சுப்பர் ஈகோ" ஆகும் என்று கூறலாம். இம்மூன்று நிலைகளையும் மனிதன் உரிய காலங்களில் வெளிப்படுத்த வேண்டும். அல்லாமல் பொருத்தமற்ற முறையில் வெளிப்படுத்தினால், சூழலுக்கு ஏற்ப ஒருவர் தன்னைச் சீர்ப்படுத்த முடியாத நிலை ஏற்படும். இத்தகையவர்கள் சில சமயங்களில் நடத்தைப் பிறழ்வு அல்லது சாதாரண நடத்தை கொண்டவராகச் செயற்படச் சந்தர்ப்பம் உண்டு.

**அருட்சகோதரி. யோசவ்வா யோசவ்.** MSC.
திருச்சிலுவை கன்னியர்சபை
சிரேஷ்ட விரிவுரையாளர் - தாதியபட்டப்படிப்பு.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

நவீன மனிதனின் அத்தியாவசிய தேவையாகக் கணிக்கப்படத்தான் செய்கின்றன. இருந்தும் இத் தொழில் நுட்ப தொடர்பாடற் கருவிகள் மனிதனை அழிக்கவோ, குழப்பவோ பயன்படுத்தப்படக்கூடாது என்பதுதான் சரியானதாக இருக்கும்.

இருப்பினும் இத்தொடர்பு சாதனங்கள் மனிதனையே தன் கைக்குள் வைத்து ஆட்டிப்படைக்கின்றது. ஆவணிமாதம் ஆறாம் திகதி நமது மறைமாவட்ட ரீதியிலான சமூகத் தொடர்பாடல் தினமாகவும் 26ந் திகதி தேசிய மட்டத்திலான சமூகத் தொடர்பாடல் தினமாகவும் நாம் அனுஷ்டித்தோம்.

அதே வேளை இச்சாதனங்கள் யாவும் மனிதனின் நல்வாழ்வுக்கே ஒழிய, இவற்றின் தேவைக்காக மனிதன் இல்லை என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வோம்.

மனித விடுதலைக்காக இவற்றினை செவ்வனே பயன்படுத்துவோம். ஒடுக்கப்பட்ட சமூகத்துக்காக ஓங்கிக் குரலொலிக்க உபயோகிப்போம். சமயத் தத்துவங்களையும், சமூகக் கருத்துக்களையும் மக்கள் முன் வைத்து விழிப்பூட்டுவோம்.

— ஆசிரியர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இலங்கையைப் பொறுத்தமட்டில் ஜுலை, ஆகஸ்ட் மாதங்கள் கறை படிந்த வரலாற்றினைக் கொண்ட மாதங்கள் ஆகும். 83ம் ஆண்டின் கறுப்பு ஜுலை ஒரு வரலாற்றுவடு. அதே போன்று 90ம் ஆண்டின் ஜுலை தொடக்கம் ஒக்டோபர் வரை கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற சம்பவங்கள் மக்களின் மனதில் என்றும் அழியாத சுவடுகள் ஆகும். கணக்கற்ற எண்ணிக்கையில் மக்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காணாமல் போனார்கள். ஆதரவற்ற குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. குடும்பத்தலைவர்களை, மனைவிகளை, மகன்மாரை, மகள்மாரை, தாய்மாரை இழந்த குடும்பங்கள் ஏராளம்! ஏராளம்!!

இவ்வரிசையில் காணாமற்போன அருட்தந்தையர்களையும் நாம் மறந்துவிடலாகாது. அருட்பணி. எஸ். செல்வராசா, அருட்பணி. யூஜின் ஹேர்பட் எஸ். ஜே அடிகளார் என்போர் எமது மக்களுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் காணாமற் போய்விட்டார்கள். அவர்களை எம் இதயங்களில் இருத்திவைப்பது என்றுமே அவசியம்.

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களில்' அருட்பணி. யூஜின் ஹேர்பட் எஸ்.ஜே அடிகளாரைப் பற்றிய சில எண்ணவோட்டங்களை சிலரிடம் இருந்து பெற்று, அவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம். அதற்கு முன் அருட்பணி. யூஜின் ஹேர்பட் எஸ்.ஜே. அவர்களைப்பற்றிய சில குறிப்புகளைப் பார்போம்.

அடிகளார் அவர்களின் குடும்பம் அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வர குடும்பங்களில் ஒன்று. எனினும் அவர் எளிமையான வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார். 1971ம் ஆண்டு திருகோணமலை புனித ஜோசப் கல்லூரியில் இருந்து மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்தார்.

புனித மிக்கேல் கல்லூரி கூடைப் பந்தாட்டத்தில் தேசியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ் பெறுவதற்கு அருட்பணி யூஜின் ஹேர்பட் எஸ்.ஜே அடிகளார்தான் காரணம் என்றால் அது ஒருபோதும் மிகையில்லை. அத்துடன் அடிகளார் பல்வேறு துறைகளிலும் திறமைவாய்ந்தவராகக் காணப்பட்டார். கிழக்கு தொழில் நுட்பக்கல்லூரியின் இயக்குனராகப் பணியாற்றியவர். 1990 ஆகஸ்ட் 15ம் திகதி இனக்கலவரகாலத்தில் ஏறாவூர்ப்பகுதியில் வைத்து காணாமல் போய்விட்டார்.

எனவே அடிகளாருடன் பல்வேறு வகையில் ஒன்றுபட்டுப் பணியாற்றியவர்களுடன் நேர் காணலைக் கண்டு அவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

முதலில் அவருடன் ஒன்றாய்பணியாற்றி, நண்பராய் வாழ்ந்த அருட்பணி, போல் சற்குணநாயகம் எஸ்.ஜே அடிகளாரைச் சந்தித்து, அருட்பணி. யூஜின் ஹேர்பட் அடிகளாரைப்பற்றி கூறும்படி கேட்டுக் கொண்டோம்.

**❖ அருட்பணி. போல் சற்குணநாயகம் அடிகளார்.**

ஒருவருக்கு அநீதி நடப்பதாக அறிந்தால் கடைசி வரைக்கும் போராடுவார். பொறுத்துக்கொள்ள மாட்டார். எல்லாத் துறைகளிலும் கெட்டித்தனமிக்கவர். இறைபக்தி அதிகம் கொண்டவர். மிகப்பெரிய கோடீஸ்வரராக இருந்தாலும் ஏழையாகவே வாழ்ந்தவர்.

ஒருமுறை இருதயபுரம் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு மக்கள் தேவாலயத்திற்குள் அனுப்பப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்கிடையில் பங்குத்தந்தையையும் அறைக்குள் வைத்துப்பூட்டியிருந்தனர். இருதயபுரப் பகுதிக்குள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. என்ன நடந்தது என்றே எவருக்கும் தெரியவில்லை. பங்குத் தந்தை என்னவானார் என்பதும் தெரியவரவில்லை. அப்போது புனித. மிக்கேல் கல்லூரியில் இருந்து அருட்பணி. யூஜின் ஹேபர்ட் அடிகளார் இருதயபுரம் செல்வதில் மிகவும் பிடிவாதமாக இருந்தார். நாங்கள் எவ்வளவோ தடுத்துப்பார்த்தோம், கேட்கவில்லை. சைக்கிளை எடுத்துக் கொண்டு இருதயபுரம் போய் பங்குத்தந்தையை மீட்டுக் கொண்டு வந்தார்.

இன்னொருமுறை நடந்த சம்பவம் ஒன்று. ஒருநாள் புனித. மிக்கேல் கல்லூரியின் மதிலை படையினர் உதைத்து, உதைத்து உடைத்துக் கொண்டு இருந்தனர். மேல்மாடியில் இருந்த அவர் பாய்ந்து வெளியே ஓடிச்சென்று படையினருடன் பயங்கரமாக வாக்குவாதப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குண்டுவைப்பவர்களைப் பிடியுங்கள், அதைவிட்டு மதிலை உடைக்காதீர்கள்" என்று சண்டைபிடித்தார்.

அதேபோன்று 1990ம் ஆண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இனவன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது வாழைச்சேனைப் பங்குத்தந்தை அருட்பணி. கி. அன்னதாஸ் அடிகளார், அச்சுறுத்தலுக் குள்ளாகி ஆபத்துக்குள்ளாகியிருந்தார். அவ்வேளை மட்டக்களப்பில் இருந்து வாழைச்சேனைக்கு ஏறாவூர் ஊடாக 'ஸ்கூட்டரில்' சென்று அருட்பணி. கி. அன்னதாஸ் அடிகளாரைப் பத்திரமாக மட்டக்களப்பிற்கு அனுப்பி விட்டு, இன்னொரு வாழைச்சேனைச் சிறுவனைப் பத்திரமாக மட்டக்களப்புக்குக் கொண்டு வரும்வழியில் ஏறாவூரில் வைத்து காணாமல் போய்விட்டார்.

அவர் வாழும்போது மற்றவர்கட்காகவே வாழ்ந்தார்; இறக்கும்போதும் மற்றவர்கட்காகவே இறந்தார்.

**அடுத்ததாக மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் திரு. எஸ். செல்வநாதன் அவர்களிடம் அடிகளாரைப் பற்றிக் கேட்டோம்.**

**திரு. எஸ். செல்வநாதன்:**

அடிகளாருடன் எனக்கு நேரடியாகப் பேசிப் பழக்கமில்லை. ஆனால் அவரைத் தொடர்ச்சியாகப் பலவருடங்கள் அவதானிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அவர் தன்னைப்பற்றி ஒரு போதும் சிந்தித்ததில்லை. மற்றவர்கட்காகவே வாழ்ந்தவர். எப்போதும் அழுக்கான குருத்துவ அங்கியையே அணிந்திருப்பார். கிழக்குத் தொழில் நுட்பக் கல்லூரியில் (அரசடி-பார்வீதி) இருந்து மிக்கேல் கல்லூரிக்கு சைக்கிளில் வருவார். சைக்கிளை விட்டிறங்கி அதேவேகத்தில் சைக்கிளை அப்படியே தூக்கிக்கொண்டு மாடிப்படியில் ஓடியேறுவார். அவ்வயதிலும் அந்த அசாத்திய சுறு சுறுப்பு என்னைக் கவர்ந்தது.

**தொடர்ந்து மட்.சிவானந்தா தேசிய பாடசாலையின் விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. எஸ். மோகன்குமார் அவர்களிடம் அடிகளாரைப்பற்றிக் கேட்டோம்.**

**திரு. எஸ். மோகன்குமார்:**

நான் என் வாழ்க்கையில் கடவுளைக் கண்டுள்ளேன். (அவரின் கண்கள் பனிக்கின்றன). அக் கடவுள்தான் பாதர். ஹேபர்ட் அடிகளார். நான் ஓர் இந்து வாக இருந்தபோதும் அவர் என்னிடம் எவ்வித வேறுபாட்டை யும் காட்டவில்லை. அவரிடம்தான் 'கூடைப்பந்தாட்டம்' பழகினேன்.

பாடசாலை விட்டு பின்னேரம் 3 மணிக்குக் கூடைப்பந்தாட்ட மைதானத்திற்குள் வந்தார் என்றால் 7 மணிவரை எங்களுடன் இருப்பார்.

கொழும்புக்குக் கூடைப்பந்தாட்டப் போட்டிக்குப் பெரும்பாலும் புகைவண்டியில்தான் செல்வோம். வண்டியில் ஏறியதும் கூடைப்பந்தாட்டத்திற்கான "கூடையை" பின்னத் தொடங்கி விடுவார். கொழும்பு சென்றதும் அதை வாங்குவதற்குத் தயாராய் இருப்பார்கள். அவற்றை விற்றுப்பெறும் பணத்தில் எங்களுக்கு சாப்பாடு வாங்கித் தருவார்.

போட்டிகள் முடிந்தபின்னர் எங்கள் ரீ-சேர்ட்டு களைக் கழுவிப்போடுவார். நாங்கள் எங்கு படுக்கின்றோமோ அங்குதான் அவரும் படுப்பார். நாங்கள் என்ன சாப்பிடுகின் றோமோ அதைத்தான் அவரும் சாப்பிடுவார்.

அப்போதெல்லாம் நுளம்புச் சுருள்கள் இல்லை. நாங்கள் நித்திரையானபின் எங்களுக்கு நுளம்பு கடிக்காமல் இருக்க மட்டையால் விசிறிக்கிக்கொண்டே இருப்பார். அவர் எப்போது நித்திரையாகின்றார் என்று தெரியாது, ஆனால் காலையில் எழும்பும்போது அவர் 'பைபிள்' உடன் கோயிலுக்குள் இருப்பார். அவர் மனிதனாக வாழ்ந்த ஒருபுனிதர்.

அடிகளார் பாவித்த சைக்கிள் வண்டி அவரின் சொந்தத் தயாரிப்பு ஆகும். அமெரிக்கா சென்று வரும்போது தொப்பிகள், ரீ.சேட்டுகள், வெள்ளிரும்பு மாலை போன்ற நிறையப் பொருட் களைக் கொண்டுவந்து எல்லாருக்கும் கொடுப்பார். ஆனால் ஒன்றையும் இலவசமாகக் கொடுக்க மாட்டார். ஒரு ரூபாவையாவது பெற்றுக் கொண்டுதான் கொடுப்பார். இலவசமாகக் கொடுத்தால் அதன் பெறுமதி மற்றவர்கட்கு விளங்காது என்பது அவரின் கருத்து.

அடிகளார் சிறந்த பௌதிகவியல் ஆசிரியர் ஆவார். அத்துடன் சிறந்த இசைஞானம் கொண்டவர்.

இவ்வாண்டு ஆகஸ்ட் 15ம் திகதியுடன் அவர் மறைந்து 16 வருடங்கள் முடிவடைந்து விட்டன. அவரின் ஆத்மா இறைவனிடம் சேர்ந்திருக்க எம்பிரார்த்தனைகள் அவசியம்.

-ஆழியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஒற்றையாட்சி முறை என்றால் என்ன, அந்த ஆட்சி முறை தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் எவை, தோல்விக்கான சான்றுகள் எவை போன்ற வினாக்களுக்குரிய அடிப்படைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.**

### ஒற்றையாட்சி முறை :

அரசின் உயர்வான அதிகாரமாகவுள்ள இறைமையினை அடிப்படையாகக் கொண்ட, ஆட்சி முறையினை ஒற்றையாட்சிமுறை என்றும், சமஷ்டியாட்சிமுறை என்றும் இருவகைப்படுத்தலாம். மத்தியரசிடம் அதிகாரங்கள் குவிந்துள்ள ஆட்சி முறையினை ஒற்றையாட்சி முறை (Unitary System) என்பர். மாறாக, மத்தியரசு (Central State) மாநில அரசுகளிடம் (Regional States) அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள ஆட்சிமுறையினை சமஷ்டி ஆட்சி முறை (Federal System) எனக் கூறுவர்.

இலங்கையானது 1948/02/04 இல் சுதந்திரம் அடைந்ததில் இருந்து ஒற்றையாட்சி முறையின் கீழ் ஆளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மத்தியரசின் இறையாண்மை உயர்ந்துள்ளது. இதனால், மத்தியரசினை அமைக்கின்ற அரசாங்கம் உயர்வான அதிகாரத்துடன் செயற்படுகின்றது. மேலும், 74 சதவீதமான சிங்கள மக்களின் வாக்குப்பலத்தில் அரசியல் நடாத்துகின்ற பேரினக் கட்சிகள் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தினால் போதும் என்ற நிலையிற் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக 1947இல் இருந்து இன்றுவரை தேர்தல்களினூடாக மாறிமாறி ஆட்சியதிகாரத்தினைக் கைப்பற்றி வருகின்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்கு வாங்கிகளிலேயே கவனமாக இருந்து வருகின்றன. முன்னாள் பிரதமர் D.S. சேனநாயக்காவில் இருந்து இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரை சிங்கள மக்களின் வாக்குகளே தமது அரசியல் பலம் எனக் கருதி வந்துள்ளனர். அவ்வாக்குகளை வசூலிப்பதற்காக பேரினச்சிந்தனைகளை தேர்தல் களங்களில் விதைக்கின்றனர்.

### இலங்கையில் ஒற்றையாட்சி முறையின் தோல்வி.....

உண்மையில் ஒற்றையாட்சிமுறை ஓரினக் கலாசாரமுடைய மக்கள் வாழுகின்ற நாடுகளுக்கே பெரும்பாலும் பொருத்தமாகவுள்ளது. எமது இலங்கை பல்லின சமூகக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. மேலும், வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற அரசியல் சமூக நாகரிகம், மனப்பக்குவம் இந்நாட்டு அரசியல் தலைமைகளிடம் இல்லை. அரசியல் இலாபத்திற்காக, தேர்தல் வெற்றிக்காக எதனையும் செய்யக்கூடிய நிலையில் பேரினக் கட்சிகள் உள்ளன. நாட்டின் தூர நோக்குகளை விட குறுகிய கட்சி இலாபங்களே முக்கியமானவை என்ற போக்கில் அக்கட்சிகள் செயற்படுகின்றன.

இரு பிரதான சிங்களக்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதிலேயே ஆர்வமாகவுள்ளன. அதற்காக நாட்டினையும், மக்களையும் அதல பாதாளத்திற்கே தள்ளக்கூடிய கருத்துகள், வாக்குறுதிகளை அக்கட்சிகள் விதைத்து வருகின்றன. மேலும், சிங்கள அரசியலில் புதிய கதாநாயகர்களாக முகம் காட்டும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சியினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாத சிந்தனையின் உச்ச நிலையினைத் தொடுமளவுக்குத் தம்மை அடையாளப்படுத்தி வருகின்றனர். எந்த வழியிலாவது வெற்றியடைவது, எப்படியாவது பதவி சுகத்தினை அனுபவிப்பது என்பதில் பேரினக் கட்சிகள் குறியாகவுள்ளன.

S.W.R.D. பண்டார நாயக்கா அவர்கள் எந்த வகையிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தேர்தல் வியூகத்தினை 1956இல் வகுத்தார். '24 மணித்தியாலங்களுக்குள் தனிச்சிங்கள அரசகரும மொழிச்சட்டம்' என்ற பேரினவாதத்தினை சிங்கள மக்களுக்கு அரசியல் இனிப்பாக வழங்கினார். தேர்தலில் வெற்றி பெற்றதும், வாக்கினை நிறை வேற்றினார். தமிழைப் புறக்கணித்தார். தமிழ் இனத்தினை ஓரங்கட்டினார். பண்டார நாயக்கா வினால் மூட்டப்பட்ட இனவாதத்தீ 1958இல் கொழுந்து விட்டெரிந்தது. தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் வன்முறை வெடித்தது.

இலங்கைத் தென்பகுதியில், தமிழ் மக்களின் உயிர் உடைமைகள் பறிக்கப்பட்டன, எரிக்கப்பட்டன. அந்த இனக்கலவரம் இலங்கையில் தேர்தல்களின் பின்னர் சம்பிரதாய நிகழ்வுகளாக மாறின. அதில் உச்ச வன்முறையாக 1983 கறுப்பு யூலையினைக் குறிப்பிடலாம்.

சிங்களவர் இனம் ஆளும் இனம், சிறு பான்மைத்தமிழ் பேசும் இனம் ஆளப்படும் இனம் என்ற எழுதப்படாத விதி இலங்கையில் அரங்கேறியது. இலங்கை அரசியலை முழுமையான நாடகமாகக் கருதினால், அதில் சிங்கள அரசியல் தலைவர்கள் தம்மைக் ஹீரோக்களாகக் காட்டமுற்பட்டனர். வில்லர்களாக தமிழ்த் தலைவர்களை சிங்கள மக்களுக்கு அடையாளப்படுத்துகின்றனர்.

இலங்கைவாழ் இந்திய வம்சா வழியினரின் குடியுரிமையினைப் பறித்த 1948- பிரசாவுரிமைச் சட்டம், 1956- தனிச்சிங்கள அரசகருமமொழிச் சட்டம், தமிழ்ப் பிரதேசக்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், இனவாதவன்முறைகள், பெருந் தேசியவாதத்தினை சட்டபூர்வமாக்கும் 1972, 1978 அரசியல் திட்டங்கள், பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை, வேலைவாய்ப்பில் தமிழர்கள் புறக்கணிப்பு, நியாயமான தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் மறுப்பு என்பன தமிழர்களைப் புறக்கணிக்கும் செயல்களாக அமைந்தன.

ஜனநாயக வழிமுறையில் அரசியலில் ஈடுபட்ட தமிழர் பிரதிநிதிகளால், சிங்கள மயமாக்கப் பட்ட ஜனநாயகத்தில் இருந்து எதனையும் பெற முடியாமல் போய்விட்டது. சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ்த்தலைவர் கள், சிங்களத் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் விளலுக்கு இறைத்த நீராயின. சிங்களவர் - தமிழர் இனப்பிரச்சினை இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் விஷ்வரூபம் எடுத்தது.

நாடு சுதந்திரம் அடைந்தால், பட்டுவேட்டி கிடைக்கும் எனக் கனவுகண்ட தமிழர்களின் கட்டிய கோவணமும் உருவப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்நியர் பூட்டிய விலங்குகள் அகற்றப்பட்ட பின்னர். சொந்தநாட்டு பேரினவாதிகள் தமிழர்களுக்கு விலங்கினை மாட்டும் நிலை ஏற்பட்டது.

இலங்கையின் பேரினஜனநாயகம், சிறு பான்மைத் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கத் தவறியது. இதனால், தமிழர்களின் ஜனநாயக முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இந்நிலையில் தமிழர்களின் தீவிரப் போக்கான அரசியல் முனைப்படைந்தது. அந்த நிலையில் கூட தேசியப்பிரச்சினையான இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பேரினத் தலைமைகள் முன் வரவில்லை. உரிமைப் போராட்டத்தினை அடக்கியும், அழித்தும் விடலாம் என்ற போக்கில் ஸ்ரீலங்காத் தலைமைகள் செயற்பட்டன.

பேரினவாத அரசியலின் ஜனநாய அணுகு முறை, இராணுவ அணுகுமுறை என்பன இரண்டும் இனப்பிரச்சினைகளை மேலும் வளர்க்கவே செய்தது. விளைவாக உள்நாட்டு யுத்தம் இரண் டரைத் தாசப்தமாக நீடித்தவண்ணம் உள்ளது. அதிரடி, பதிலடி, அதிரடிப்பதிலடி என்ற பாணியில் உள்நாட்டுப்போர் முனைப்பாக முன்னெடுக்கப் படுகின்றது. இவ்வாறான சூழலில் நாட்டின் தேசியஐக்கியம், ஒருமைப்பாடு, இறைமை, பொருளா தாரம் என்பன சீர்குலைந்துள்ளன. சீர் குலைந்த பொருளாதாரம் அபிவிருத்தியின் நேர்முகத்தைப் பாராமல், போர்முகத்தினையே பார்த்துக் கொண்டு வருகின்றது.

மொத்தத்தில் மக்கள் சமூக, பொருளாதார, அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப, கலாசார ரீதியாகச் சாதகமான நிலைமையினை அடைய முடியாத நிலையில் திண்டாடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒற்றையாட்சி முறைமை தோற்றமைக்கான சான்றுகள்.**

எமது நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடு' என்ற அடையாளத்துடனேயே உள்ளது. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அணுக்குண்டுகளின் தாக்கங் களுக்குள்ளாகி மயான பூமியாகக் காட்சியளித்த யப்பான் அபிவிருத்தியின் சிகரத்தினை அடையும் நிலையிலுள்ளது. எமது நாட்டுத்தலைவர்கள் ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தினைக் கொண்டாடுகின்றார்கள். ஆனால் அந்த சுதந்திரத் தின் மூலமாக எமது தலைவர்கள் சாதித்தது என்ன? கடந்த அரை நூற்றாண்டு காலமாக இந்நாட்டில் ஆக்க பூர்வமாக நடைபெற்ற சாதனைகள் எவை? அரசியல் தலைவர்கள் ஆளும் காலத்தில் ஹீரோக் களாகக் காட்டப்படுகின்றனர். நாட்டின் நிலைமை சீரோவை (பூச்சியம்) நோக்கியே செல்கின்றது.

போதுமான பொருளாதார அபிவிருத்தி இல்லை, தேசத்தின் அடித்தளத்தினையே அதிரவைக்கும் தேசியப்பிரச்சினை தீர்க்கப் படவில்லை, மனித உரிமைகள் பேணப்பட வில்லை, யுத்தம் நிறுத்தப்படவில்லை, நாட்டின் சகல பாகங்களும் அரசின் கட்டுப்பாட்டில் இல்லை, இந்நாட்டு மக்கள் வடக்கில் இருந்து தெற்குவரை சுதந்திரமாகப் பயணம் செய்யமுடியவில்லை, அகதி வாழ்க்கை முடிந்த பாடில்லை, வரவு செலவுத் திட்டம் ஒவ்வொன்றிலும் துண்டு விழும் தொகை குறைய வில்லை, பேரின வாதத்தின் கடுமை - கொடுமை குறையவில்லை, இந்நாட்டுப் புத்தி ஜீவிகளின் வெளியேற்றத்தினைத் தடுக்க முடியவில்லை, ஊழல்கள் - இலஞ்சங்கள் ஒழியவில்லை, பொதுவான தேசப்பற்று உணர்வு இல்லை, சகலருக்கும் சமத்துவ உரிமை இல்லை, நாட்டின் கேந்திர முக்கியத்து வமான இடங்களைக் கூட அரசினால் காப்பாற்ற முடியவில்லை.... இல்லை... இல்லை என்ற பட்டியல் எல்லை கடந்து செல்லுகின்றது.

கண் கெட்டபின்பும் அரசாங்கத் தலைவர் கள் சூரிய நமஸ்காரம் செய்யத் தயாராக இல்லை. புதிய அரசாங்கம் 2006ஆம் ஆண்டில் நின்று முன்நோக்கிப் பார்ப்பதிலிருந்து 1956ஆம் ஆண்டின் மோசமான குழம்பிய குட்டை அரசியலைப் பின்னோக்கிச் செல்கின்றது.

உள்நாட்டு அரசியலில் நாட்டின் கௌரவம் இறைமை, தன்னாதிக்கம் பற்றிப்பேசும் அரசாங் கத்தலைவர்கள் வெளிநாட்டுக் கடன்களுக்காக முக மெல்லாம் பல்லாய் அலைகின்றனர். உள் நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் யதார்த்தமாகச் சிந்திப் பவர்கள், தேசிய இனப்பிரச்சினைய சமஷ்டி முறை யின்கீழ்த் தீர்க்கும்படி கூறுகின்றனர். மகிந்த சிந்தனை ஒற்றையாட்சியினை விடாப்பிடியாகப் பற்றியுள்ளது. மொத்தத்தில் எமது நாட்டின் எதிர்காலம் இறந்த காலத்தினையே நோக்கிச் செல்கின்றது.


கிணற்றுத் தவளைச் சிந்தனையில் இருந்து பேரினவாதம் விடை பெறுவதாக இல்லை. சர்வதேச மட்டத்தில் இந்நாட்டுக்கென்று தனித்துவமான கௌரவம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆக்கத் திற்குப் பயன்படுத்த வேண்டிய மனிதவளம், பௌதிகவளம், பொது நிதியம் யுத்த அழிவுக்காகக் கொட்டப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன. இந்நாட்டு அரசியல் தலைமைகள் ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் வழுக்கு மரங்களிலேயே ஏறுகின்றனர். சாண் ஏறுவார்கள் முழமல்ல; பாகம் சறுக்குகின் றார்கள். விட்ட தப்புகளையே மீண்டும், மீண்டும் தொட்டுச் செல்கிறார்கள். திருந்துவதாகவும் இல்லை; திருந்தாமைக்காக வருந்துவதாயும் இல்லை. சாதனைப்பட்டியல்களை அடுக்குவார்கள். மக்களின் சோதனைகள், வேதனைகள் தொடர் கதைதான். ஒட்டு மொத்தமாக ஒரு வரியில் கூறுவதாயின் இலங்கையின் ஒற்றையாட்சி ஜனநாயகம் தோல்வி யடைந்து விட்டது. தோல்வியடைந்த ஒற்றை யாட்சியில் பேரினத் தலைமைகள், யுத்த வேள்வியி னையே நடத்துகின்றார்கள். முறையான சமஷ்டித் தீர்வின் கீழ் இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப் படாது போனால் அழிவுகள் அனர்த்தங்கள் தொடர் கதைதான்.

**திரு. ஜி. ஸ்ரீநேசன்** M. A.
*விரிவுரையாளர்.*
*மட்டக்களப்பு கல்விக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த டாவின்சி கோட்




கடந்த சில மாதங்களாக இலத்திரனியல், அச்சக ஊடகங்களில் மிகவும் பரபரப்பையும், பல சர்ச்சைகளையும் ஏற்படுத்திய ஹொலிவூட் திரைப் படம்தான் 'த டாவின்சி கோட்" (THE DA VINCI CODE). 2003ம் ஆண்டின் டான் பிறவுண் (DAN BROWN) எனும் நாவலாசிரியரின் படைப்பான "த டாவின்சி கோட்" எனும் நாவலின் திரைவடிவம்தான் "த டாவின்சி கோட்". இந் நாவல் புனை கதை (FICTION) வகையைச் சார்ந்ததாக இருப்பதாகக் கூறப்பட்டாலும், இதில் கூறப்படும் பல விடயங்கள் சர்ச்சைக்குரியதாகவும், உண்மைக்குப் புறம்பானதாகவும், கிறிஸ்தவ அடிப்படை நம்பிக்கை, சத்தியங்களை மட்டந்தட்டும் நோக்குடையவையாகவும் இருக்கக் காணப்பட்டதனால் பல கண்டனக்குரல்கள் பலரிடமிருந்தும் வெளிப்பட்டன. பல இடங்களிலே இந்நாவலையும், திரைப் படத்தையும் தடை செய்யும்படி கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இலங்கை நாட்டில் கத்தோலிக்க ஆயர் மன்றத்தினரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஜனாதிபதி அவர்களே இத்திரைப் படத்தை தடை செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

பல சர்ச்சைகளும், கண்டனங்களையும இந்நாவலும், திரைப்படமும் எதிர் கொண்டாலும் இவையிரண்டும் பல சாதனைகளையும் புரிந்திருக் கின்றன. கடைசியாகப் பெற்றுக்கொள்ள முடிந்த தகவல்களின் அடிப்படையில் இந் நாவல் பதிப்பு செய்யப்பட்டதில் இருந்து, இன்று வரை சுமார் 60.5 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனை யாகியிருக்கின்றது. அது மட்டுமன்றி சுமார் 44 மொழிகளிலே மொழி பெயர்ப்புச் செய்யப் பட்டிருக்கின்றது. (பதிப்பக) வரலாற்றிலே சிறந்த விற்பனை நூல்களின் பட்டியலில் எட்டாவது இடத்திற்கு வந்திருக்கின்றது இந் நாவல். இது இவ்வாறிருக்க இத் திரைப்படம் மேலும் பல வசூல் சாதனைகளையும் தட்டியிருக்கின்றது. திரைப் படம் வெளியிட்டு இவ்வருடம் யூன் மாதக் கடைசி வரையில் அமெரிக்காவில் மட்டுமே 205 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலாகப் பெற்று வசூலில் சாதனை படைத்திருக்கிறது.

விற்பனையிலும், வசூலிலும் சாதனை படைத்த இந்நாவலும், திரைப்படமும் சர்ச்சைகளையும், கண்டனங் களையும் பெற்றுக் கொள்ளக் காரணம் என்ன? மேலோட்ட மாகப் பார்க்கின்ற போது இந் நாவலும், திரைப்படமும் ஒரு "புனை கதை" வடிவத்தை (fiction) கொண்டிருந்தாலும் அதில் வருகின்ற சம்பவங்கள் குறிப்பாக இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானதாகவும், வரலாற்றைத் திரிபுபடுத்தி உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் கிறிஸ்தவ மத உணர்வு களையும், நம்பிக்கைகளையும் தாக்குவதாகவும் இருப்பதோடு குறிப்பாகக் கத்தோலிக்க திருச்சபையை மட்டந்தட்டும் நோக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் கூறப்படும் கருத்துக்களுமாக உள்ளன. மத உணர்வுகளையும், நம்பிக்கைகளையும் கேலி செய்யும் தரமற்ற சில ஊடக சாதனங்களின் பிரச்சார யுக்தியே பணத்தை மட்டுமே நோக்காக கொண்டு புனையப்படும் இவ்வாறான கதைகளும் திரைப்படமும் பிரபல்யமடையக் காரணமாக இருக்கின்றன எனக் கொள்ளலாம்.

இந்நாவலில் கூறப்படும் கருத்துப்படி,

- இயேசுக் கிறிஸ்துவின் கடவுள் தன்மையை உரோமைப் பேரரசன் கொன்ஸ்ரன்ரைன்தான் தனது அரசியல் நோக்கங்களுக்காக (கண்டுபிடித்தான்) ஏற்படுத்தினான்.
- இவனே புதிய ஏற்பாட்டு நூல்களின் தொகுப்பை வரையறை செய்தான்.
- திருச்சபையிலே பெண்ணடிமைச் சித்தாந்தத்தை (தனத்தை) நியாயப்படுத்தவும், பெண்களை அடக்கியாளவும் கொஸ்டிக் நற்செய்திகள் (Gnostic gospels) தடைசெய்யப்பட்டன.
- இயேசுவும், மரியமதலேனாளும் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தனர். இத் தலைமுறையினர் இன்று வரை பிரான்சு நாட்டின் தென்பகுதியில் இருக்கின்றனர்.
- பல ஆயிரக்கணக்கான இரகசிய ஆவணங்கள் கிறிஸ்தவ மறையின் விசுவாச சத்தியங்களை பொய்ப்பிக்கின்றன.

இவையே இந்நாவலிலும், திரைப்படத்திலும் கூறப்படும் முக்கிய கருத்துக்களாகும். இவற்றை நிருபிப்பதற்காக நாவலாசிரியர் பல புதியஏற்பாட்டுத் திருமறைப் புறநூல்களையும் (உ+மாக புனித தோமாவின் நற்செய்தி, யூதாவின் நற்செய்தி போன்றவற்றையும்) தப்பறைகளைப் போதித்தவர்களுடைய ஆவணங்களையும் பயன்படுத்துகின்றனர். எல்லா மக்களாலும், கிறிஸ்தவ சபைகளாலும் உண்மையென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய ஏற்பாட்டு நூல்களை நாவலாசிரியர் கண்டுகொள்ளத் தேவையில்லை என்பதை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இவர் கூறும் வரலாற்றுத் தகவல்கள் எதுவுமே வரலாற்றைக் கற்றுத் தேர்ந்த வரலாற்று ஆய்வாளர்களினால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் கூறும் பல "இரகசிய ஆவணங்கள்" எங்கிருந்து பெறப்பட்டன, யாரால் இவை எழுதப்பட்டன, இவற்றை எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்பன போன்ற பல விடயங்கள் இவருக்கு மட்டுமே வெளிச்சம். இதில் வேடிக்கை என்னவென்றால் விவிலிய மறைவல்லுநர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், பலவற்றையும் கற்றுத்தேர்ந்த கல்வியாளர்கள், அறிஞர்கள் யாருமே இவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவோ, ஆதரவாகப் பேசவோ இல்லையென்பதுதான். எது எவ்வாறிருப்பினும் இந்நாவலும் திரைப்படமும் வசூலிலும், விற்பனையிலும் சாதனை படைத்திருக்கின்றதென்பது இதில் கூறப்படும் கருத்துக்கள் யாவும் உண்மையானததென்பதால் அல்ல, மாறாக, பொய்மைக்கும், கற்பனைக்கும் இருக்கின்ற மௌசையும், வரவேற்பையுமே எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் மற்றவர்களது மத நம்பிக்கைகளையும், மதஉணர்வுகளையும் கிளறிவிட்டு, புண்படுத்திப் பணம் பண்ணுவதென்பது மேற்கத்தைய கலாசாரத்தின் ஓர் அங்கமாக மாறி வருவதையே இந் நிகழ்வுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. பணம் பண்ணுவதற்காக இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய பல கற்பனைக் கதைகளையும், கட்டுக்கதைகளையும், புரளிகளையும் கிளப்பிவிடும் பல எழுத்தாளர்களும், சினிமாக்காரர்களும் அவர்களுக்கு ஒத்தூதும் சில ஊடக சாதனங்களுமே இந் நாவலும், திரைப்படமும் இவ்வளவு பிரபல்யமாகக் காரணமாகும்.

இறுதியாக அண்மைய ஆய்வுகளின்படி இந்நாவலும், திரைப்படமும் எதிர்பார்த்த அளவிற்கு திருச்சபைக்கோ, கிறிஸ்தவ விசுவாசத்திற்கோ எவ்வித பாதிப்பையும், எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. மாறாக திருச்சபை இயல், கிறிஸ்து இயல், திருச்சபை வரலாற்று இயல் என்பவற்றை கற்றுத்தேற வேண்டுமென்கிற அவாவும், அறிவுத் தேடலும் அதிகரித்து செல்கின்றதென்பதே உண்மையாகும். ஆக தீமையை நன்மையாக மாற்றக் கூடியவர் இறைவன் என்பதும், கிறிஸ்துவே உண்மையும் வழியுமாகவும் இருக்கின்றார் என்பதும் மீண்டும் ஒருமுறை நிருபிக்கப்படுகின்றது. மேலும் "இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றிக் கொள்ளா......" (மத் 46/18) என்ற யேசுவின் வார்த்தைகள் மாறாதவை என்பது இன்னுமொருமுறை எமக்கு நிருபிக்கப் படுகின்றது.

-அருட் தந்தை. **சந்திரகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருத்துவம் தொடர்பான வாசகர்களின் கேள்விகளுக்குப்பதிலளிக்க முன்வந்துள்ளார் டாக்டர் ஜூடி ரமேஸ்ஜெயக்குமார் அவர்கள். நோய்கள், அதற்கான காரணங்கள், அதற்குரிய சிகிச்சை முறைகள் தொடர்பாக வாசகர்களின் சந்தேகங்களுக்கு டாக்டரிடம் நீங்கள் தெளிவு பெறலாம் (ஆ-ர்)

கடவுள் மனிதனை ஏதேன் தோட்டத்தில் உருவாக்கும் போது ஆணுக்குப் பெண்ணையும், பெண்ணுக்கு ஆணையும் ஒருவர், ஒருவருக்குத் துணையாக உருவாக்கினார். அவர் உலகை இவ்வாறு உருவாக்கும் போது 'பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்' என்றார். பிறப்பு ஒன்று உண்டென்றால் இறப்பும் சேர்ந்தே இருக்கும். எனவே இந்தமண்ணில் பிறக்கிற ஒவ்வொரு உயிரினமும் மீண்டும் மண்ணுக்கே திரும்பும் என்பது இயற்கையின் நியதி. எனவே தான் விவிலியமும் "மனிதா நீ மண்ணாய் இருக்கிறாய் மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்" என்கிறது. மனித வாழ்வு நிலையற்றது. இந்த நிலையற்ற உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் பல்வேறு விதமான நோய்கள், பிணிகள், வேதனைகள், சோதனைகள் எல்லாவற்றையும் வெற்றியோடு எதிர்கொண்டே வாழ வேண்டும். எனவே மனித வாழ்வு சவால்கள் நிறைந்தது. மரணம் அது ஆறிலும் வரும் நூறிலும் வரும் என்கிறது பண்டையப் பழமொழி. இந்த மரணம் இயற்கையாகவும் வரலாம் செயற்கையாகவும் வரலாம்.

கடந்த இரண்டு தசப்தகால உள்நாட்டுப் போருக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்மக்களுக்கு சாவு என்பது இன்று சாதாரண விடயமாகிவிட்டது. மனிதனால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்கள், இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படுகின்ற அனர்த்தங்கள் எல்லாம் ஒருமனித உயிரை அவன் இருக்கவேண்டிய வயதிலும், இளமையிலேயே காவுகொள்கின்றது. இவ்வாறு இன்று நம்பிக்கையில்லாத நிலையில் வாழ்கின்ற நாம் இறக்கும் வரையாவது எவ்விதமான உடல், உள நோய்களும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வது மிகமுக்கியமானது.

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மனிதனும் ஒருபொறியாகவே இயங்குகின்றான். கடவுள் மனிதனைப் படைத்தபோது "நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைத்து உண்" என்றார். ஆனால் இன்றைய நாளில் அவ்வாறு மனிதன் கடினமாக உழைத்து உண்பதற்குப் பதிலாக பொறிகளின், கணினிகளின் உதவியுடனேயே எல்லாக் கருமங்களையும் ஆற்றுகின்றான். மனிதப் பொறியின் பயன்பாடு மந்த கதியிலேயே நடைபெறுகின்றது. இதனால் மனிதன் சோம்பேறியாகி வருந்தி உழைக்கும் திறனை இழந்துவிட்டான். அத்தோடு ஆடம்பரமான வாழ்விற்காக நிறைய உழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்படுவதனால் பொழுதுபோக்குகள், சந்தோசங்கள் என்பவற்றையும் இழந்து இளவயதிலேயே உடல், உள ஆரோக்கியம் குன்றி பல்வேறுவிதமான நோய்களினாலும் பாதிக்கப்பட்டு அவதிப்படுகின்றான். முன்பு ஐம்பது வயதுக்கு பின்னர்தான் ஏற்படும் என்று சொல்லப்பட்ட சலரோகம், உயர்குருதி அமுக்கம், இதயநோய்கள், சிறுநீரகநோய்கள், சுவாசநோய்கள் எல்லாம் தற்போது இளவயதிலேயே ஏற்படுகின்றன. அத்துடன் மது, மாது, போதை வஸ்து போன்றவற்றிற்கு அடிமைப்படுவதனால் சாதாரண தொற்று நோய்கள் அல்லாமல் ஆட்கொல்லி "எயிட்ஸ்" போன்ற தொற்று நோய்களிற்கும் ஆளாக வேண்டி ஏற்படுகின்றது.

ஒரு மனிதனின் நலன் என்பது அவனது உடல், உள, சமூக ஆன்மீக நலன்கள் சமநிலையில் காணப்படுவதைக் குறிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது. எனவே மனிதன் இந்த நான்கு நிலைகளையும் சரிவர வைத்துக் கொள்ளவேண்டும். இன்றைய நவீன விஞ்ஞான உலகம் எல்லா நோய்களையும் பூரணமாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும், கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குரிய மருத்துவ வசதிகளை உருவாக்கித் தந்துள்ளது. அதனை மனிதன் முழுமையாகப் பயன்படுத்தவேண்டும்.

மருத்துவத்தில் "வருமுன் காப்பதே சிறந்தது" என்பது மகுடவாக்கியம். அத்தோடு மனிதனுக்கு ஏற்படக்கூடிய உடல், உளநலக் கோளாறுகளை முன்கூட்டியே அறிந்து வைத்திருப்பது "வெள்ளம் வருமுன் அணைகட்டியதற்கு" ஒப்பானது. மருத்துவர்களாகிய எமது தலையாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளில் மக்களுக்கு இது தொடர்பான சந்தேகங்களை நீக்கி விளங்கங்களை கொடுப்பது முக்கியமான பணியாகும்.

"தொண்டன்" எனப்படுகின்ற இந்த மாதாந்த பல்சுவை மஞ்சரியூடாக நாங்கள் உங்களது உடல், உளநலன்கள், மருத்துவ உதவிகள் தொடர்பான சந்தேகங்களுக்குப் பதிலளிக்க ஆவலாய் உள்ளோம். உங்களது உடல், உளநலன், தொடர்பாக ஏற்படுகின்ற சந்தேகங்களை கேள்வியாகக் கேட்கும் போது அதற்குரிய சரியான விளக்கங்களை தந்துதவுவதற்கு நாங்கள் ஆவலாய் உள்ளோம்.

நோய் நொடியற்ற ஆரோக்கியமான வாழ்வை, வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நீங்கள் எங்களுக்கு எழுதுங்கள்.

**வைத்தியகலாநிதி,**
**பா. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
போதனா வைத்தியசாலை
மட்டக்களப்பு.

## 13ம் வருட நிறைவைக் கொண்டாடும்



## புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலய இயேசுவின் திரு இருதயச்சபை

புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தில் பணிபுரிந்துவரும் மகாபரிசுத்த இயேசுவின் திரு இருதயச்சபையானது, இந்த வருடம் இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவுடன் தனது 13ம் வருட நிறைவு விழாவையும் சிறப்பித்தது. 04.07.1993 அன்று திரு இருதயப் பெருவிழாவின் போது சகோதரர். P.M. ஜோசப் (இளைப்பாறிய அதிபர்) அவர்களது அயராத முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. இயேசுவின் திரு இருதயப் பக்தியைப் பங்கில் ஊக்குவிப்பதை இது தன் நோக்கமாகக் கொண்டிருந்தது. இன்று எமது மறைக் கோட்டத்திலே இயங்கி வரும் ஒரேயொரு சபையாகவும் இது காணப்படுவது குறிப்பிடத்தக்கது. 12.07.2002 இலிருந்து திரு இருதய ஸ்தாபகத்தை இல்லங்கள் தோறும் பிரதிஷ்டை செய்வதையும், புதுப்பிப்பதையும் செயற்றிட்டமாகச் செய்து வருகிறது. பங்குத் தந்தையர், அருட்சகோதரர் ஆகியோரின் துணையுடன் இதுவரை 100 இல்லங்களில் திரு இருதய ஸ்தாபகமும், புதுப்பித்தலும் நடைபெற்றுள்ளன.

23.06.2006 அன்று இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவின் காலைத் திருப்பலி அங்கத்தவரால் சிறப்பிக்கப்பட்டது. மாலையில் தலைவர் தலைமையில் பொதுக்கூட்டமும் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும், அதனைத்தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக "மகா பரிசுத்த இயேசுவின் திரு இருதயச் சபைக்கூட்ட ஒழுங்குகளும், செபங்களும்" என்ற நூலின் வெளியீடும் இடம் பெற்றன. அங்கு சமுகந்தந்திருந்த பங்குத் தந்தை அருட்பணி. A.D. கபிரியேல் - இயேசுசபை அடிகளாரால் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நூலானது சபையின் மூத்த அங்கத்தவரான சகோதரர். E. தேவதாசன் அவர்களது அரும் முயற்சியாலும், திரு இருதயச்சபை, பங்கு மேய்ப்புப்பணிச்சபை ஆகியவற்றின் அனுசரணையினாலும் அச்சிடப்பட்டதென்பது சிறப்பம்சமாகும். தொடர்ந்து பங்குத்தந்தை வாழ்த்தியதுடன் தமது பாராட்டையும் தெரிவித்து உரையாற்றினார். பின் நன்றியுரை இடம்பெற்றது. இறுதியில் பங்குத் தந்தைவழங்கிய இறையாசீருடன் அனைத்து நிகழ்வுகளும் இனிதே நிறைவு பெற்றன. வாழ்க! இயேசுவின் மகாபரிசுத்த இருதயம்!

**தகவல் : செல்வி. மற்றில்டா இராஜேந்திரம்**
புளியடிக்குடா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறுவோர்

தூய மரியாள் இணைப்பேராலயத் திருவிழாவை முன்னிட்டு, ப.மே.ப. சபையினரால் 15.08.2006 அன்று நடாத்தப்பட்ட மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் அதிஸ்ரசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு.

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| ப.சீட்டு இல. 741<br>யாதவன்ஸ் கொம்யூனிகேசன்<br>இல. 42 பிரதான வீதி,<br>மட்டக்களப்பு | ப.சீட்டு இல. 1838<br>பெயர் முகவரி<br>தெளிவில்லை | ப.சீட்டு இல. 1516<br>டொவ்னல் வின்சன்ற்<br>இல.74 கூளாவடி<br>பிரதான வீதி,<br>மட்டக்களப்பு |

**ஆறுதல் பரிசுகள்**

| | |
|---|---|
| ப.சீட்டு இல. 1037<br>S. நர்த்தனா<br>இல 73, 3ம் குறுக்கு வீதி<br>மட்டக்களப்பு | ப.சீட்டு இல. 1114<br>செல்வி. ஆர். எவாஞ்சலின்<br>காகித ஆலை<br>வாழைச்சேனை |

| | | |
|---|---|---|
| ப.சீட்டு இல. 140<br>றதீஸ்கரன்<br>12/5 அதிகாரி வீதி<br>மட்டக்களப்பு | ப.சீட்டு இல: 406<br>அ. அருளானந்தம்<br>56/15A 3ம் குறுக்கு<br>கல்லடித்தெரு<br>மட்டக்களப்பு. | ப.சீட்டு இல: 678<br>செல்வி. G. சுதர்சினி<br>தாதியர் கல்லூரி<br>மட்டக்களப்பு |

# புதிய புனிதர்கள்

*எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ம்திகதி ஐந்துபேருக்கு புனிதர்பட்டம் வழங்கப்படும் என்று திருத்தந்தை அறிவித்துள்ளார். இவ்வாறு புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளவர்கள்*

- லத்தின் அமெரிக்காவில் புனிதராகும் முதல் ஆயர்
- முத்திப்பேறு பெற்ற ரபேல் குயிசா வலன்சியா இவர் மெக்சிக்கோ ஆயர்
- முத்திப்பேறு பெற்ற பிளட்சமல்டன் இத்தாலிய மறை மாவட்டத்தை சேர்ந்த குருவான இவர் திரு இருதய சலேசிய சகோதரிகள் சபையின் நிறுவனர்
- முத்திப்பேறு பெற்ற ரோசா வேனோரினா இத்தாலிய சபை நிறுவனர்
- முத்திப்பேறு பெற்ற தியோடரா குயுரின், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் அமெரிக்காவில் புனித மலை மரியன்னை சபை நிறுவனராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30 - 09 - 2006

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 50

**(விடுதலைப் பயணம் 32: 15-27)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே திரும்பி மலையிலிருந்து இறங்கி வந்தார். உடன் படிக்கைப் பலகைகள் இரண்டும் அவர் கையில் இருந்தன. அப்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. அந்நேரத்தில் மக்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்ட .......................... மோசேயை நோக்கி, "இது பாளையத்திலிருந்து எழும் போர் முழக்கம்" என்றார். அதற்கு மோசே, "இது வெற்றி முழக்கமோ தோல்விக் குரலோ அன்று பாட்டொலிதான் எனக்குக் கேட்கிறது என்றார். .............................. அவர் நெருங்கி வந்தபோது கன்றுக்குட்டியையும் நடனங்களையும் கண்டார். மோசேக்கு சினம் மூண்டது. அவர் தம் கையிலிருந்த பலகைகளை மலையடிவாரத்தில் .............................. உடைத்துப் போட்டார். அவர்கள் செய்து வைத்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகுமட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி ............................ மக்களைக் குடிக்கச்செய்தார். பின்னர் மோசே ஆரோனை நோக்கி, "இம்மக்கள் உமக்கு என்ன செய்தார்கள்? இவர்கள் மேல் பெரும் பாவம் வந்து சேரச்செய்து விட்டீரே!" என்று கேட்டார். அதற்கு .......................... "என் தலைவராகிய நீர் சினம் கொள்ள வேண்டாம். இம்மக்கள் பொல்லாதவர்கள். என்பது உமக்குத் தெரியுமே! அவர்கள் என்னை நோக்கி" "எங்களுக்கு வழிகாட்டும் .............................. செய்து கொடும். எங்களை எகிப்து நாட்டினின்று நடத்திவந்த அந்த ஆள் மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை" என்றனர். நானும் அவர்களிடம் '......................... அணிந்திருப்பவர்கள் கழற்றித் தாருங்கள்' என்றேன். அவர்களும் தந்தனர். நான் அதனை நெருப்பில் போட, இந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது என்றார். ஆரோன் மக்களை ............................ விட்டுவிட்டதால், தங்கள் எதிரிகள் ஏளனம் செய்யும் அளவுக்கு அவர்கள் மனம் போன போக்கில் நடப்பதை மோசே கண்டார். பாளையத்தின் நுழைவாயிலில் மோசே நின்று கொண்டு, "............................ பக்கம் உறுதியாய் இருப்போர் என்னிடம் வாருங்கள்" என்றார். லேவியர் அனைவரும் வந்து கூடினர். அவர் "இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவர் கூறுவது இதுவே. ஒவ்வொருவனும் தன் வாளை .......................... செருகிக்கொண்டு பாளையத்திற்குள் சுற்றிவந்து, வாயில் வாயிலாகக் கடந்து சென்று தன் சகோதரனையும், தன் நண்பனையும், தனக்கு அடுத்திருப்பவனையும் வெட்டி வீழ்த்த வேண்டும்" என்றார்.


**விடைகள் : ஆண்டவரது, பொன், ஆரோன், யோசுவா, இடையில், கட்டுப்பாடின்றி, பாளையத்தை, இஸ்ரயேல், தெய்வங்களை, வீசி எறிந்து**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்– 50

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி
(மன்மோகன்சிங், அப்துல்கலாம், கலைஞர் மு.கருணாநிதி)

2. 'யாமறிந்த மொழகளிலே தமிழ்மொழி போல் " .....................
என்னும் பாடலை எழுதியவர்
(பாரதியார், கவிஞர் கண்ணதாசன், பாரதிதாசன்)

3. உலகின் முதல் திரைப்படத்தை உருவாக்கியவர்
(தோமஸ்அல்வாஎடிசன், லூமியர்சகோதரர்கள், எட்வாட்மைபிரிட்ஜி)

4. இந்தியச் செய்தி நிறுவனங்களில் ஒன்று
(றோய்ற்றர், பி.ரி.ஐ, டாஸ்)

5. உலகில் பொதுமக்களுக்கான முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒலிபரப்பிய நிறுவனம்
(தூரதர்சன், ரூபவாகினி, பி.பி.சி)

6. இலங்கையில் வானெலி ஒலிபரப்பு தொடக்கப்பட்ட ஆண்டு
*(1925, 1923, 1945)*

பெயர் : ..............................................................................................

முகவரி : ..............................................................................................

..............................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**

**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 48**

**தொண்டன்**

**அ.பெ. எண் 44**

**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 47விடைகள்

வெள்ளி, தூயகம், பசும் பொன்னால், இருவளையங்களை, பேழையின், கற்பலகைகளை, கெருபுகளை, இறக்கைகளை, இரக்கத்தின், உனக்கு.

## அறிவை வளர்ப்போம் - 47 விடைகள்

1) அவுஸ்ரேலியா
2) சனத்ஜெயசூரியா
3) படைக்கஞ்சான்
4) சோல்பரிபிரபு
5) ஆசனம்
6) தாய்தந்தை

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் விடை அளித்து இசை நாடா பரிசு பெறுவோர்.**

- வேர்ஜீனியா எல்டன்
  இல: 12, 1ம் தெரு, பாரதிபுரம்
  திருகோணமலை.
- ச. ஆன்வித்தியா
  111/14, சின்ன உப்போடை,
  மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் விடை அளித்து ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்.**

- யே. ஜெனிகரி சுதன்
  101/2A மின்சார நிலைய வீதி,
  திருகோணமலை
- P. ஆன் சப்திகா
  108/1, மத்திய வீதி,
  மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

- பா. அஷ்வினி
  11, கன்னியா வீதி
  அன்புவழிபுரம்,
  திருகோணமலை
- ஒடேலியா ரூபகீர்த்தி
  எல்லை வீதி
  செங்கலடி

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி.** (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Registered as a News Paper in Sri Lanka.*

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## செப்டம்பர் ~ 2006

**கத்தோலிக்க நற்சிந்தனை - நேரம் :- காலை 6.10 மணி.**

நாள்:

| | |
|---|---|
| 02,03,04,05 | - அருள் தந்தை அன்ரனி ஜெயராஜ் |
| 06.07,08 | - போதகர் P.T. பிரான்சிஸ் |
| 16,17,18,19 | - புவனேஸ்வரி அகஸ்டின் |
| 20,21,22 | - ஆனாந்தா ஏ.ஜி.இராஜேந்திரம் |

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - நேரம் :- காலை 6.30 மணி.**

நாள்:

(வழிபாடு, உரை ,செய்திகள் ,போட்டி,நாடகம்,
பாடல்கள் உள்ளிட்ட சஞ்சிகை மலர்)

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - நேரம்:- மாலை 6.30 மணி.**

நாள் 12 - விவிலியக் கதை வினாவிடைப் போட்டி
அமைப்பு-பாரதிப்பிரியா

26 - நாடகம்
தயாரிப்பு புவனேஸ்வரி அகஸ்டின்

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொடர்பு. சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

*Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org